# ஒரு கோடி ரூபாய் பரிசு எனும் பிதற்றல்

**ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையின்**
**பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு**

வெளியிடுவோர்

தமிழக புத்தக வெளியீட்டுக் குழு
**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்**
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி,
கோடம்பாக்கம், சென்னை- 600 024.

Copyrights Reserved

***'Oru Khodi Roopai Parisu enum Pithatral'***

First Edition **2009**

Published by :

**ISHA'ATH COMMITTEE TAMIL NADU**
**AHMADIYYA MUSILM JAMA'ATH**
No. 11, First Main Road,
United India Colony, Kodambakkam,
Chennai - 600 024. Tamil Nadu.

بسم الله الرحمن الرحيم

# ஒரு கோடி ரூபாய் பரிசு எனும் பிதற்றல்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கடந்த ஆண்டு தமிழகத்திற்கு வருகை தந்ததன் விளைவாக தமிழகத்தில் முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாதவர்களைக் கொண்ட பரந்த வட்டத்தில் அன்னாரின் வழிகாட்டல்களும் சாதனைகளும் பாராட்டப்பட்டன. மேலும் அவர்களின் சுற்றுப்பயணத்தை பத்திரிகைகள் வெளியிட்ட விதம் அஹ்மதிய்யத்தின் எதிரிகளையும் அச்சத்திற்குள்ளாக்கியது. அவர்கள் நாடு திரும்பியதிலிருந்து எதிரிகள் பொய்யான கட்டுக்கதைகளை மக்கள் மத்தியில் பரப்ப ஆரம்பித்து விட்டனர். சமீபத்தில் ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையினர் ஒரு கோடி ரூபாய் பரிசு என்ற தலைப்பில் பொய்யின் மொத்த உருவமாக ஒரு பிரசுரத்தை வெளியிட்டுள்ளனர். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் தூய நடத்தை மீது பொய்யான அவதூறுகளை வாரியிறைத்து, யூத ஆலிம்களைப் போல் மூல வாக்கியத்தை முறைகேடாக மாற்றியமைத்து மிக மிக கீழ்த்தரமான , இழிவான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளனர். அவர்களின் இச்செயல் கிறித்தவ பாதிரிமார்கள் தற்போது திருக்குர்ஆனின் அசல்

வாக்கியத்தை கூட்டி குறைத்து, நபிமொழிகளை முறைகேடாக திருத்தம் செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய நடத்தை மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தி வருவதைப் போன்ற அதே செயலேயாகும்.

அல்லாஹ், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப இமாம் மஹ்தியாகவும் வாக்களிக்கப் பட்ட மஸீஹாகவும் அனுப்பியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் **கைரில் மக்ளூபி அலைஹிம் வலல்லால்லீன்** (கோபத்திற்குள்ளானவர்கள், வழித்தவறியவர்கள்) எனும் வசனத்திற்கு அக்கால ஆலிம்கள் யூத கிறித்தவர்களின் அடிச்சுவட்டை பின்பற்றுவார்கள் என்று விளக்கமளித்துள்ளார்கள்.

عَنْ اَبِی سَعِیْدِ الْخُدْرِیَ رَضِیَ اللّٰهُ عَنْهُ عَنِ النَّبِیِّ صَلَّی اللّٰهُ عَلَیْهِ وَسَلَّمَ قَالَ : لَتَتَّبِعُنَّ سُنَنَ مِنْ قَبْلِکُمْ شِبْرًا شِبْرًا وَ ذِرَاعًا ذِرَاعًا حَتّٰی لَوْ دَخَلُوْا جُحْرَ ضَبٍّ تَبِعْتُمُوْهُمْ. قُلْنَا یَا رَسُوْلَ اللّٰهِ! اَلْیَهُوْدُ وَ النَّصَارٰی، قَالَ :فَمَنْ؟ (بخاری کتاب الاعتصام والسنة باب قول النبی صلی الله علیه وسلم لتتبعین سنن من کان قبلکم)

ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்; நீங்கள் உங்களுக்கு முந்தைய சமுதாயங்களை ஜாணுக்கு ஜாண், முழத்திற்கு முழம் அப்படியே பின்பற்றுவீர்கள். எதுவரை என்றால், அவர்கள் ஓர் உடும்பின் பொந்தில் நுழைந்தால் நீங்களும் அவ்வாறே செய்வீர்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் கூறுவது யூதர்களையும் கிறித்தவர்களையுமா? என நாங்கள் கேட்டதற்கு வேறு யார்? என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(புகாரி, கிதாபுல் இஃதிஸாம் வல் ஸுன்னா)





ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை மறுத்து தமிழக ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையின் ஆலிம்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப முற்றிலும் யூத கிறித்தவர்களின் நடைமுறையையே நிகழ்த்திக் காட்டியுள்ளார்கள். இவர்களைப் பற்றி நாங்கள் ஒன்றும் கூறத் தேவையில்லை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே இவர்களைப் பற்றி ‘வானத்தின் கீழ் மிகக் கெட்ட படைப்பினமாக இருப்பார்கள்’ என்று குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் இந்த ஆலிம்கள் முஸ்லிம்களை வழி கெடுப்பவர்களாக இருப்பார்கள். முஸ்லிம்கள் இவர்களிடம் நேர்வழிக்காக செல்லும்போது அங்கே அவர்கள் குரங்குகளாகவும் பன்றிகளாகவும் இருப்பார்கள் என்று கூறியுள்ளார்கள். நபிமொழியின் அசல் வாசகம் இதுவாகும்:

تَکُوْنُ فِیْ اُمَّتِیْ فزعة فیصیر الناس الی علماء هم فاذا هم قردة و خنازیر (کنز العمال جلد ۷ صفحہ ۱۹۰)

“ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது உம்மத்தில் சிதறுண்ட அமைதியிழந்த ஒரு காலம் வரும். அப்போது அவர்கள் தமது ஆலிம்களிடம் நேர்வழிக்கான நம்பிக்கையுடன் செல்வார்கள். அப்போது அவர்கள் அந்த ஆலிம்களை குரங்குகளாகவும் பன்றிகளாகவும் காண்பார்கள்.”

(கன்ஸுல் உம்மால், பாகம் 7, பக்கம் 190)

அதாவது அவர்களின் உலமாக்களின் நடவடிக்கைகள் மிக்க தீயதாகவும் வெட்கக் கேடானதாகவும் இருக்கும். எனவே ‘ஷரீஅத் பாதுகாப்புப் பேரவை’யின் பெயர்தாங்கி ஆலிம்கள் தமது நடவடிக்கையால் இமாம் மஹ்தியும் வாக்களிக்கப்பட்ட மஸீஹுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் உண்மைக்கு சான்று பகர்கின்றனர். இவர்களின் இவ்வாறான நடவடிக்கைகளால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பதற்றமடைந்து விடுவதில்லை. மாறாக இதனை அன்னாரின் உண்மைக்கு தெளிவான அடையாளமாகவே கருதுகிறது.

ஒரு கோடி ரூபாய் பரிசு என்ற பிதற்றலைக் கொண்ட அந்தப் பிரசுரம், ‘முஸ்லிம்களின் ஒற்றுமையைக் குலைக்க

உருவாக்கப்பட்ட காதியானி மதம்'என்ற வார்த்தைகளால் தொடங்கப் பட்டுள்ளது. நாம் கேட்கிறோம்: அவர்கள் இந்த பிரசுரத்தை வெளியிடும்போது அவர்களிடம் என்ன ஒற்றுமை இருந்தது? எந்த ஒற்றுமையைப் பற்றி அவர்கள் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்? தேவ்பந்திகளின் ஒற்றுமையையா? அல்லது பரேல்விகளின் ஒற்றுமையையா? ஷியாக்களின் ஒற்றுமையையா? அல்லது அஹ்லே ஹதீதின் ஒற்றுமையையா? வஹ்ஹாபிகளின் ஒற்றுமையையா? அல்லது ஜமாஅத்தே இஸ்லாமியின் ஒற்றுமையையா? இவர்கள் அனைவரும் முன்பே ஒருவர் மற்றவர் மீது குஃப்ர் ஃபத்வா (மார்க்கத்திலிருந்து வெளியேறியவர் எனும் மார்க்கத் தீர்ப்பு) வழங்கியுள்ளனர். முன்பே ஒருவர் மற்றவரை ஆங்கிலேயர்களின் கைக்கூலிகள் என்று கூறியுள்ளனர். ஒருவர் மற்றவரை தத்தமது அடக்கஸ்தலங்களில் அடக்கம் செய்யக்கூடாது என ஃபத்வா வழங்கியுள்ளனர். அதே ஃபத்வாக்களைத் தான் இப்போது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மீதும் கொடுத்துள்ளனர்.

தற்போது இந்தியாவில் பரேல்வி முஸ்லிம்களின் எண்ணிக்கை 80 சதவிகிதத்திற்கும் அதிகமாக உள்ளது. தேவ்பந்திகள் மற்றும் அவர்களின் கொள்கையை ஒத்த பிரிவினர்களைப் பற்றி பரேல்விகளின் தலைவர் அஹ்மது ரிஸாகான் பரேல்வியின் கீழ்க்கண்ட இந்த ஃபத்வாவைப் படியுங்கள்: அஹ்மது ரிஸாகான் ஓரிடத்தில் ஃபத்வா வழங்கியவாறு இவ்வாறு எழுதுகிறார்:

"அவர்கள் அனைவருடனான அன்னியோன்னிய பழக்கம் முற்றிலும் ஹராம். அவர்களுக்கு ஸலாம் கூறுவது, பேசுவது ஹராம். அவர்களை அருகில் அமர வைப்பது ஹராம். அவர்கள் அருகில் அமர்வது ஹராம். அவர்கள் நோய்வாய்ப்பட்டால் அவர்களை நலம் விசாரிக்கச் செல்வது ஹராம். அவர்கள் மரணித்து விட்டால் முஸ்லிம்களைப் போல் அவர்களை குளிப்பாட்டி கஃபன் செய்வது ஹராம். அவர்களின் ஜனாஸாவை தூக்குவது ஹராம். அவர்களுக்கு ஜனாஸா தொழுவது ஹராம். அவர்களை முஸ்லிம் அடக்கத்தலங்களில் அடக்கம் செய்வது ஹராம். அவர்களின் அடக்கத்தலங்களுக்கு செல்வது ஹராம்."

(ஃபத்வா ரிஸ்விய்யா, பாகம் 6, பக்கம் 90)





ஆகவே ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையினர் கூறும் ஒற்றுமை இதுதான் ! இப்படி ஏற்கெனவே சிதறுண்டு, இழிவிற்கு இலக்காகி இருக்கும் இத்தகைய முஸ்லிம்களின் ஒற்றுமையை(?) இனி வேறு யார் பிரிக்க வேண்டிக் கிடக்கிறது?

இப்பிரசுரத்திற்கான பதிலை தொடங்கும் முன்பு இவ்வாறான ஆலிம்கள் ஷரீஅத்தின் பெயரில் பாதுகாப்புப் பேரவையை அமைத்திருந்தாலும், ஷரீஅத் என்றால் என்ன, அதற்கு என்னென்ன புனித கோட்பாடுகள் உள்ளன? அதன் போதனைகள் என்ன என்பதை இவர்கள் உணரவில்லை. அவற்றின்படி இவர்கள் நடக்கின்றார்களா? என்றால் அதற்கான அடையாளத்தைக் கூட இவர்களிடம் காண முடியவில்லை என்பதை வாசகர்களுக்கு நாம் தெரிவித்துக் கொள்கிறோம். இஸ்லாமிய ஷரீஅத் இணை வைப்பவர்களின் சிலைகளைக் கூட ஏசாதீர்கள் (6:108) என நமக்குபோதிக்கின்றது. ஆனால் இவர்களோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தின் கீழ் வாக்களிக்கப்பட்ட மஹ்தி, மஸீஹ் என்று இறையறிவிப்பின் படி வாதம் புரிந்தவரை தயக்கமின்றி ஏசிப் பேசுகின்றனர். ஒருவருக்கு ஒருவரது வாதம் புரியாமல் இருப்பதும் அதனால் அவர் அதை ஏற்க மறுப்பதும் வேறு விஷயம். ஆனால் அதற்காக அந்த வாதியை ஏசுவதற்கோ அவரை இழிவுபடுத்துவதற்கோ இஸ்லாமிய மார்க்கச் சட்டம் அனுமதி வழங்கவில்லை. அப்படியிருக்க ஷரீஅத்தின் பெயரால் ஷரீஅத்துடன் விளையாடும் இது எப்படிப்பட்ட ஷரீஅத் பாதுகாப்புப் பேரவை என்பதை நமது கண்ணியத்திற்குரிய வாசகர்கள் சிந்தித்துப் பார்க்குமாறு வேண்டிக் கொள்கிறோம். ஒரு கோடி ரூபாய் பரிசு என்ற பிரசுரத்திற்கான பதிலை நாம் முன் வைக்கும் முன்பு நடுநிலையைக் கொண்டவாசகர்களுக்கு ஒரு விஷயத்தை தெளிவுபடுத்துவதை அவசியமாக கருதுகிறோம்:

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு 1882 இல் இறைவனால் நியமிக்கப்பட்டதற்கான முதல் இறையறிவிப்பு கிடைத்தது. பிறகு 1889 இல் கிடைக்கப்பெற்ற இறை அறிவிப்பிற்கேற்ப பைஅத் எனும் உடன்படிக்கையை மக்களிடமிருந்து வாங்க ஆரம்பித்தார்கள். இறையறிவிப்பின்படியே அன்னார், எந்த ஈஸா (அலை) அவர்களை முஸ்லிம்களும்

கிறித்தவர்களும் எதிர்நோக்கி இருக்கின்றார்களோ அவர்கள் மரணித்துவிட்டார்கள்; இறைவன் அவர்களின் சாயலில் என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அனுப்பியுள்ளான் என அறிவிப்பு செய்தார்கள். அக்கால ஆலிம்கள் திருக்குர்ஆன் மூலமாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானில் உயிருடன் இருக்கின்றார்கள், இறுதி காலத்தில் அதாவது (ஹிஜ்ரி) 14ஆம் நூற்றாண்டில் வருகை தர உள்ளார்கள் என்பதை நிரூபிக்க முயன்றார்கள். ஆனால் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் தெளிவான சான்றுகளால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபித்துக் காட்டினார்கள். இதனால் வாயடைத்துப் போன இதே ஆலிம்கள் பிறகு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தன்னை நபி என்று வாதித்துவிட்டார் எனக் கூறத் தொடங்கினர். மேலும் எனக்குப் பின் நபியில்லை எனும் நபிமொழியை முன் வைக்கத் தொடங்கினர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் எந்த நபித்துவமும் கிடையாது என மறுத்துவிட்டு, அல்லாஹ்வின் நபியாகிய ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் நபியாகக் கொண்டு வந்து, எனக்குப் பின் நபியில்லை என்ற நபிமொழியை இவர்களே மறுப்பவர்களாகி விட்டனர். எங்களைப் பொருத்தவரை எனக்குப் பின் நபியில்லை எனும் நபிமொழிக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொடுத்துள்ள அதே பொருளைத்தான் நாங்களும் கொடுக்கிறோம். ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி(ரலி) அவர்களை தபூக் போருக்கு தன்னுடன் அழைத்துச் செல்லாததால் அவர்கள் மிகுந்த வருத்தத்திற்கு உள்ளாகி இருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

قال علیہ السلام یا علی اما ترضیٰ ان تکون منی کھارون من
موسیٰ غیر انک لست نبیا.

(طبقات کبیر جلد ۵ صفحہ ۱۵)





“அலி அவர்களே! மூஸா (அலை) அவர்களுக்கு ஹாரூன் (அலை) அவர்களைப் போல் எனக்கு நீங்கள் இருப்பதில் திருப்தி கொள்ளவில்லையா? ஆனால் வித்தியாசம் என்னவென்றால், எனக்குப் பிறகு நீர் நபியாக இருக்க மாட்டீர். ”

(திப்காத்தே கபீர், பாகம் 5, பக்கம் 15)

எனவே லா நபிய்ய பஅதீ (எனக்குப் பிறகு நபியில்லை) என்பதன் தெளிவான பொருள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் அவர்கள் இல்லாத நேரத்தில் எவரும் நபித்துவ பதவியை அடைய முடியாது என்பதேயாகும். ஏனென்றால் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் இல்லாத நேரத்தில் ஹஸ்ரத் ஹாரூன் (அலை) அவர்கள் நபிப் பதவியை பெற்றிருந்தார்கள். நமது எதிர்தரப்பு ஆலிம்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் கொடுக்கப்பட்ட பொருளை நிராகரித்துவிட்டு வேறு பொருளைக் கொடுப்பதற்கு யார் அதிகாரம் வழங்கினார்கள்?

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் கீழ்வரும் வழிகாட்டலும் காணப்படுகிறது:

“قولوا انہ خاتم الانبیاء ولا تقولوا لا نبیّ بعدہ”

(درمنثور جلد ۵ صفحہ ۲۰۴)

“ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நீங்கள் காத்தமுல் அன்பியா (நபிமார்களுக்கெல்லாம் காத்தம்- சிறந்தவர்) என்று கூறிக் கொள்ளுங்கள். ஆனால் அவர்களுக்குப் பின் நபி இல்லை என கூறாதீர்கள்.” (துர்ரே மன்ஸூர், பாகம் 5, பக்கம் 204)

இந்தக் கருத்தின் அடிப்படையில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தின் கீழ் அன்னாரின் உம்மத்தி நபியாக ஏற்கின்றது. எனவேதான் கூலூ இன்னஹூ காத்தமுல் அன்பியாயி வலா தகூலூ லா நபிய்ய பஅதஹூ (நபி ஸல்லல்லாஹு அவர்களை காத்தமுல் அன்பியா என்று கூறுங்கள்; ஆனால் அவருக்குப் பிறகு நபி இல்லை என்று கூறாதீர்கள் என்ற ஹதீஸுக்கு மார்க்கப் பெரியோர்கள் இவ்வாறு விளக்கம் அளிக்கின்றார்கள்:

" اذا المعنیٰ انّه لا یاتی نبیٌ ینسخ شرعه ولم یکن من امّته "

(موضوعات کبیر ص ۵۹)

**" இதன் பொருள் அன்னாரின் ஷரீஅத்தை ரத்து செய்யக் கூடிய மற்றும் அன்னாரின் உம்மத்தைச் சாராத எந்த நபியும் இனி வர முடியாது."** (மவ்ளூஆத்தே கபீர், பக்கம் 59)

இந்த சந்தர்ப்பத்தில் நாம் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பும் இன்னொரு விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் மற்றும் இறுதி நபித்துவம் தொடர்பாக முன் வைக்கப்பட்ட சான்றுகளுக்கு பதிலளிக்க முடியாத ஆலிம்கள் திராணியற்று அன்னாரின் வாழ்க்கை மீது தாக்குதல் தொடுக்க ஆரம்பித்துவிட்டனர். அன்னாரை ஆங்கிலேயர்களால் தோற்றுவிக்கப்பட்ட நபி என்று கூறத் தொடங்கினர். ஆனால் ஆங்கிலேயர்கள், தங்களின் கடவுளான ஈஸா மஸீஹின் சுயரூபத்தை தோலுரித்துக் காட்டி, தங்களது மார்க்கத்தையே கேள்விக்குறியாக்கக் கூடிய ஒருவரை தங்களின் நோக்கத்திற்காக முன்னிறுத்தி அவருக்கு உதவியும் செய்யக்கூடிய அளவுக்கு இந்த முட்டாள் மவ்லவிகளைப் போன்றவர்கள் அல்ல. அப்படியே ஆங்கிலேயர்கள் எவரையாவது நிறுத்த நினைத்திருந்தால், அவர்களின் கடவுளை நான்காவது வானத்தில் வைத்திருக்கும் இந்த மவ்லவிகளைத் தான் உண்மையில் நிறுத்தி இருப்பார்கள். அது மட்டுமன்றி முழு இஸ்லாமிய உலகிற்கும் கடும் எதிரியாக விளங்குகின்ற எல்லா முஸ்லிம் பிரிவுகளும் மறுக்கின்ற ஒருவரை ஆங்கிலேயர்கள் தமது சுய லாபத்திற்காக எவ்வாறு நிறுத்துவார்கள்?

இந்த முன்னுரைகளுக்குப் பிறகு இப்போது நாம் ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையினரால் முன் வைக்கப்பட்டுள்ள ஆட்சேபணைகளையும் அவற்றிற்கான பதில்களையும் வரிசையாகக் காண்போம்.

**ஆட்சேபணை எண் :** 1

"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஏற்பட்ட வெற்றி சிறியது. மிர்ஸாவுக்கு ஏற்படுகின்ற வெற்றி மிக





அபாரமானது." (ஆதாரம்: ரூஹானீ ஹஜாயின் பாகம் 16, பக்கம் 288)

**பதில்:** ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையினர் ஷரீஅத்தின் கோட்பாடுகளை காற்றில் பறக்க விட்டுவிட்டு யூதர்களைப் போல் திரித்து வளைத்து மேற்கண்ட வாக்கியத்தை சுயமாக படிக்கும் பாமர முஸ்லிம்கள் கொதித்து எழ வேண்டும் என்ற நோக்கில் முன் வைத்திருக்கிறார்கள். நாம் இந்த ஷரீஅத் பாதுகாப்பாளர்களிடம் கூறிக் கொள்வது என்னவென்றால், ஒரு கோடி ரூபாய்க்கான பிரசுரம் வெளியிடும்போது, எதற்கு எதிராக ஆட்சேபணை செய்யப்படுகிறதோ அதற்கான மூல வாக்கியத்தை அப்பிரசுரத்துடன் ஏன் இணைக்கவில்லை? அப்படி இணைத்திருந்தால் முஸ்லிம்களுக்கு உண்மை நிலை தெளிவாகியிருக்குமே! உங்களின் ஏமாற்று வித்தை அம்பலமாகி இருக்குமல்லவா? ஆனால் இவர்களின் ஆட்சேபணையைப் பார்க்கும்போது இதனை இவர்கள் சுயமாக முன்வைக்கவில்லை. மாறாக முந்தைய ஏதேனும் ஒரு நூலிலிருந்து எழுத்துக்கு எழுத்து காப்பியடித்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூல நூல்களை இவர்கள் பார்க்கக்கூட இல்லை. அப்படியே பார்த்திருந்தாலும் எல்லையில்லா ஏமாற்று வேலையை கையாண்டிருக்கிறார்கள். காரணம், அசல் வாக்கியம் வேறு, இவர்கள் முன் வைத்திருப்பது வேறு. இந்த ஷரீஅத் பாதுகாப்பாளர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை கண்ணால் கூட பார்த்திருக்க மாட்டார்கள் என்றே நாம் கருதுகிறோம்.காரணம், இவர்களுக்கு அன்னாரின் ரூஹானி கஸாயின் என்ற ஒரு நூல் தொகுப்பைப் பற்றி மட்டும்தான் தெரியும். எனவேதான் அவர்கள் நம்மைப் பற்றி இவ்வாறு எழுதுகிறார்கள்:

இவர்கள் இஸ்லாத்திற்கெதிராக உருவாக்கப்பட்ட ஷய்த்தான்களாகும். (நல்ல உள்ளம் கொண்டவர்களே! இப்படி எழுதுபவர்கள் நரகவாசிகள் என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்? நீங்களே கூறுங்கள்.)

அவர்கள் எழுதி வைத்துள்ள இஸ்லாத்திற்கெதிரான விஷமக் கருத்துகளில் சிலவற்றை அவர்களின் நூல்களிலிருந்தே தரப்படுகின்றன என்று எதிரிகள் தமது பிரசுரத்தில்

குறிப்பிட்டுவிட்டு, ரூஹானி ஹஜாயின் என்பதை ஆதாரமாக எழுதியுள்ளனர். (பிரசுரம் ஒரு கோடி ரூபாய், பக்கம் 1)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பான இவர்களின் அறிவை நீங்களே பாருங்கள். அன்னாரால் எழுதப்பட்ட ஒரு நூல்தான் ரூஹானி கஸாயின் என இவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். உண்மை என்னவென்றால் அன்னார் 80 க்கும் அதிகமான நூல்களை பல்வேறு தனித்தனி பெயர்களில் எழுதியுள்ளார்கள். அவையனைத்தையும் உள்ளடக்கிய 23 பாகங்களைக் கொண்ட தொகுப்பின் பெயர்தான் ரூஹானி கஸாயின் என்பதே தவிர ஒரு நூலின் பெயரல்ல. ஒரு கோடி ரூபாய் பரிசு வழங்குபவர்கள் இந்த அளவுக்கு பொறுப்பற்றவர்களாக இருப்பது ஆச்சரியம்தான்.

உண்மை என்னவென்றால், இவ்வாறான தலைப்புகளால் பாமர முஸ்லிம்களை வியப்பிற்குள்ளாக்கி, ஆவேச வார்த்தைகளால் உணர்வுகளை தூண்டிவிட விரும்புகிறார்கள். இஸ்லாத்தின் எதிரிகள் திருக்குர்ஆன் வசனங்களை கூட்டி குறைத்து ‘லாதக்ரபுஸ்ஸலாத்த வஅன்தும் ஸுகாரா’ (மயக்க நிலையில் இருக்கும்போது நீங்கள் தொழுகையின் பக்கம் நெருங்காதீர்கள்) என்ற (4 :44) வசனத்தில் ‘வ அன்தும் ஸுகாரா (மயக்க நிலையில்) எனும் சொல்லை நீக்கிவிட்டு ‘லா தக்ரபுஸ் ஸலாத்’ (நீங்கள் தொழுகையின் பக்கம் நெருங்காதீர்கள்) என்பதை மட்டும் எடுத்துக் கொண்டார்கள். இதேபோல் ‘வைலுல்லில் முஸல்லீன்’ (தொழுபவர்களுக்கு அழிவுதான்) எனும் வசனத்தை மட்டும் முன்பின் சேர்க்காமல் தனியாக எடுத்துக் கொண்டார்கள். இஸ்லாத்தின் எதிரிகள் கையாண்ட இந்த நடைமுறையைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்காத இந்த அஹ்மதிய்யத்தின் எதிரிகள் கையாண்டு இருக்கிறார்கள்.

இவர்களுடைய முதல் ஆட்சேபணையில் கூறியுள்ளதைப் போல் எந்த வாக்கியமும் மூல நூலில் கிடையாது. மாறாக அசல் வாக்கியத்தை தாங்கள் விரும்பியபடி திரித்து வளைத்து அதற்கு தவறான பொருள் கற்பித்து முன் வைத்திருக்கிறார்கள். அசல் வாக்கியம் அரபு மொழியில் உள்ளது. அது ஹஸ்ரத்





வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறையறிவிப்பாக இறங்கியதாகும். அது இவ்வாறு வருகிறது:

” فَهَاتَانِ بَشَارَتَانِ لِلْمُؤْمِنِيْنَ وَتَبْرُقَانِ كَدُرَّةٍ فِي الْكِتَابِ
الْمُبِيْنِ وَقَدْمَضٰى وَقْتُ فَتْحٍ مُّبِيْنٍ فِيْ زَمَنِ نَبِيِّنَا الْمُصْطَفٰى ﷺ
وَبَقِيَ فَتْحٌ اٰخَرُ وَهُوَ اَعْظَمُ وَاَكْبَرُ وَاَظْهَرُ مِنْ غَلَبَةٍ اُوْلٰى ﷺ
وَقُدِّرَ اَنَّ وَقْتَ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ مِنَ اللّٰهِ الرَّءُوْفِ الْوَدُوْدِ
وَاَرْحَمِ الرَّحِمِيْنَ“ .

“எனவே இவ்விரண்டு நற்செய்திகள் முஃமின்களுக்கானதாகும். அவை முத்துக்களைப் போல் தெளிவான வேதநூலில் ஒளிர்கின்றன. தெளிவான வெற்றியின் காலம் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் நடந்தது. மீதமுள்ள இரண்டாவது வெற்றி முந்தைய வெற்றியை விட பெரியதும் பகிரங்கமானதும் ஆகும். அதற்கான காலம் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலம் என்பது விதிக்கப்பட்டிருந்தது.”

இந்த சொற்றொடரில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த இடத்திலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் கிடைக்கும் வெற்றியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வெற்றியோடு போட்டியாக ஒப்பிட்டு குறிப்பிடவே இல்லை. மாறாக வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் கிடைக்கும் வெற்றியை உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைக்கும் வெற்றியாகவே குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனின் ஒரு பொது நியதியைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். அதன் கீழ் ஒவ்வொரு பொருளும் தனது இறுதி எல்லையை எட்டுகிறது. இஸ்லாமும் இந்த இயற்கை நியதிக்கேற்பவே வளர்ச்சியடைந்தது. அது மக்காவில் தோன்றி மதீனா சென்றடைந்து அருகருகே உள்ள பகுதிகளுக்கு பரவி பின்பு சிறிது சிறிதாக

உலகின் எல்லைவரை சூழ்ந்து கொண்டது. மேலும் அதன் முழுமையான வெற்றி வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் தான் கிடைக்க வேண்டியதிருந்தது. இஸ்லாத்தின் இந்த வெற்றிப் பயணத்தைப் பற்றி மார்க்க அறிஞர்கள் விவரிக்கிறார்கள். ஹஸ்ரத் மௌலானா இஸ்மாயீல் ஷஹீத் (ரலி) (பாலாகோட்) அவர்கள் லி யுழ்ஹிரஹூ அலத்தீனி குல்லிஹி (ஏனைய மார்க்கங்களின் மீது இஸ்லாத்தை மேலோங்குதல்) என்ற(61 :10) வசனம் தொடர்பாக கூறுகின்றார்கள்:

"மார்க்கத்தின் துவக்கம் நபி (ஸல்) அவர்கள் மூலமாக ஏற்பட்டது தெரிந்த ஒன்றே என்றாலும் அதன் முழுமை மஹ்தியின் கையில்தான் நிகழும்." (மன்ஸபே இமாமத்- மௌலானா முஹம்மது இஸ்மாயீல் ஷஹீத், பக்கம் 70, ஆயினா அதப் சோக் மினார் அனார்கலி, லாஹூர் 1967)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமக்கு கிடைக்கப்பெற்ற அனைத்து அருள்களும் வெற்றிகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்பால் அவர்களின் மூலமாகவே கிடைத்ததாக கூறுகின்றார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

"அன்னார் தான் ஒவ்வொரு சிறப்பின் தலையூற்றாவார்கள். எவர் ஒருவர் அன்னாரின் சிறப்பை ஏற்காமல் தனது சிறப்பு பற்றிய வாதம் புரிவாரோ அவர் மனிதரல்ல; ஷய்தானின் வழித் தோன்றலாவார். ஏனெனில் அனைத்து சிறப்புக்களின் திறவுகோல் அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து நுட்ப ஞானங்களின் கருவூலம் அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ளது.(இவற்றை) எவர் அன்னாரின் மூலமாக பெற்றுக் கொள்ளவில்லையோ அவர் நிரந்தர துர்பாக்கியவான் ஆவார். நாம் ஒன்றுமேயல்ல. நமது உண்மை நிலை என்ன! உண்மையான ஏகத்துவத்தை நாம் இந்த நபி மூலமாகத்தான் பெற்றோம். உயிருள்ள இறைவனை நாம் இந்த முழுமையான நபி மூலமாகத்தான் அடையாளம் கண்டு கொண்டோம். அன்னாரின் ஒளியால் தான் (அவனை) அடைந்தோம். இறைவனோடு உரையாடி அவன் முகத்தைக் காணும் பாக்கியமும் இந்த கண்ணியமிக்க நபியின் மூலமாகத் தான் எமக்குக்





கிடைக்கப் பெற்றது என்பதை நாம் ஏற்காவிட்டால் நாம் இறையருளை நிராகரிப்பவராகி விடுவோம். இந்த நேர்வழி எனும் சூரியனின் கதிர்கள் வெயிலாக நம்மீது விழுகின்றது. இது நம்மீது விழுந்து கொண்டிருக்கும் வரை, நாம் இதற்கு நேராக (நம்மீது விழும் வகையில்) நிற்கும் வரை நாம் பிரகாசமாக இருப்போம். "(ஹகீக்கத்துல் வஹி- ரூஹானி கஸாயின், பாகம் 22, பக்கம் 19)

**ஆட்சேபணை எண் :** 2

"மிர்ஸா காதியானியை ஈமான் கொள்ளாதவர்கள் நரகவாசிகள்." (ஆதாரம் : ரூஹானீ ஹஜாயின் பாகம் 11, பக்கம் 62)

**பதில் :** இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றை முறைகேடாக மாற்றியமைத்து வெளியிடப் பட்ட ஒன்றாகும்.அன்னார் தம்மை ஏற்காதவர்களை அவ்வாறு கூறவில்லை. மாறாக அன்னாரை சாபத்திற்குரியவர், ஷய்த்தான் என்றெல்லாம் பழித்துரைக்கும் தமது எதிரிகளையே நரகவாசிகள் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த ஒரு கோடி ரூபாய் பரிசு பிரசுரத் தில் எழுதியுள்ளதைப் போல் எவர்கள் அன்னாரை சபிக்கப்பட்ட ஷய்த்தான் (நவூதுபில்லாஹ்) என எழுதுகின்றார்களோ அவர்களைப் பற்றியதாகும். அசல் வாக்கியம் இவ்வாறு வருகிறது:

"இந்த இறைதூதர் இறைவனால் நியமிக்கப்பட்டவர், இறைவனது அமானிதர், இறைவன் புறமிருந்து வந்துள்ளார். இவர் கூறுபவற்றின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். **இவரது எதிரி நரகவாசியாவார் என என்னைப் பற்றி இந்த இறையறிவிப்புகளில் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளது.** மேலும் இவ்வனைத்து இறையறிவிப்புகளிலும் இந்த எளியவனைப் பற்றி மிகுதியாக புகழப்பட்டுள்ளது. இந்த புகழாரங்கள் உண்மையில் இறைவன் புறமிருந்துள்ளவை என்பதால் ஒவ்வொரு முஸ்லிமும் எல்லாவித கர்வம், பகட்டு, அகங்காரம் போன்றவற்றிலிருந்து விலகி, கட்டுப்பட்டு நடக்கும் பொறுப்பை தங்களின் தோள்களில் ஏந்திக் கொள்ள வேண்டும். இத்தகையவரை எதிர்ப்பது இறைவனின் சாபத்தைப் பெறுவதாகும். இத்தகையவரை நேசிப்பது இறைவனின் அன்பைப் பெறுவதாகும். "(ரூஹானி கஸாயின், பாகம் 11, பக்கம் 62, 63)

உண்மை என்னவென்றால் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தான் வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் ஆவார்கள். அவர்களை இறைவன் முந்தைய வேதநூல்களின் முன்னறிவிப்பு மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப தோற்றுவித்தான். இதன் அடிப்படையில் அன்னாரை மறுப்பது இறைவனுக்கு கட்டுப்படாமையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றை நிராகரிப்பதுமேயாகும். இங்கு கேள்வி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களைப் பற்றியதல்ல. மாறாக அன்னாருக்கு இறைவனிடமிருந்து கிடைத்த மஸீஹ் மற்றும் மஹ்தி என்ற பதவிக்கு கட்டுப்பட்டு நடப்பதைப் பற்றியதாகும். அவர் மீது நம்பிக்கை கொண்டு அவரிடம் பைஅத் (உடன்படிக்கை) செய்ய வேண்டும் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையைப் பற்றியதாகும். காலத்தின் தூதரை நிராகரிப்பது தொடர்பாக இறைவன் திருக்குர்ஆனில் மிக விரிவாக விளக்கியுள்ளான். இதைப் பற்றி அதிகம் கூறத் தேவையில்லை.

**ஆட்சேபணை எண் : 3**

“என்னை ஏற்காதவர்கள் ஹராமில் பிறந்தவர்கள்.”

(ரூஹானீ ஹஜாயின் பாகம் 9 பக்கம் 31)

**பதில்:** இதுவும் முற்றிலும் பொய்யாகும்.ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்மை ஏற்காதவர்கள் தொடர்பாக ஒருபோதும் இவ்வாறான சொற்களை பயன்படுத்தவில்லை.யூத இயல்பைக் கொண்ட இந்த ஆலிம்களின் வழக்கம் என்னவென்றால், அசல் வாக்கியத்தையும் கருத்தையும் திரித்து மாற்றியமைத்து ஒரு புதிய வாக்கியத்தை எழுதிவிடுவார்கள்.அதற்கும் உண்மைக்கும் எந்த தொடர்பும் இருப்பதில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இச்சொல்லை பாதிரி அப்துல்லா ஆத்தமிற்காக பயன்படுத்தியிருந்தார்கள். அவர் தனது அந்த்ரூனா பைபிள் எனும் நூலில் ஈருலக தலைவராகிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு தஜ்ஜால் எனும் சொல்லை பயன்படுத்தியிருந்தார். அப்துல்லா ஆத்தம் என்ற அந்த பாதிரியாரைப் பற்றி ஹஸ்ரத்





வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“இந்த ஆத்தமும் அதே பொய்யுரைக்கும் சமூகத்தைச் சேர்ந்தவரே. இதற்கு முன்பு நமது எஜமானர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை நவூதுபில்லாஹ் தனது நூலில் தஜ்ஜால் எனும் பெயரால் குறிப்பிட்ட அதே அசுத்த இயல்புடையவர்தான் இவர். ல அனத்துல்லாஹி அலா காயிலிஹி இலா யவ்மில் கியாமா. (அப்படிக் குறிப்பிட்டவர் மீது இறுதி நாள்வரை அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக).” (ரூஹானி கஸாயின் பாகம் 9, பக்கம் 300)

இஸ்லாத்திலிருந்து முர்தத் ஆகி பாதிரியாக மாறிய இந்த அப்துல்லா ஆத்தம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது பல்வேறு இழிவான ஆட்சேபணைகளை தொடுத்து வந்தார். தீய, அசுத்த ஏச்சுப் பேச்சுக்கள் எல்லை மீறியதால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவரை வலதுல் ஹராம் (தவறாக பிறந்தவர்) என எழுதினார்கள்.

இப்போது இந்த ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையின் மவ்லவிகள் இந்த முர்தத் பாதிரியாருக்கு ஆதரவாக களமிறங்கியுள்ளனர். பாமர முஸ்லிம்களை ஆவேசமூட்டுவதற்காக நஊவூதுபில்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னை ஏற்காதவர்களை ஹராத்தில் பிறந்தவர்கள் என்று கூறியுள்ளதாக எழுதியுள்ளனர். லஅனத்துல்லாஹி அலல் காதிபீன் - லஅனத்துல்லாஹி அலா காயிலிஹி இலா யவ்மில் கியாமா. (பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக - அவ்வாறு கூறுபவர் மீது இறுதிநாள் வரை அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக.)

**ஆட்சேபணை எண் : 4**

“எனக்கு மாறு செய்பவர்கள் பன்றிகள். அவர்களின் மனைவிமார்கள் நாய்களை விட இழிவானவர்கள்.”

(ஆதாரம்: ரூஹானீ ஹஜாயின் பாகம் 14 பக்கம் 53)

**பதில்:** இதுவும் தவறான முறையில் திரித்து வெளியிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது அரபி கவிதை ஒன்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசிப் பேசுகின்ற எதிரிகளை, பயிர்களை

நாசம் செய்கின்ற தீய நடத்தை கொண்ட காட்டுப் பன்றிகளோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள். அவர்களின் கீழ் வேலை செய்பவர்களை பெண்கனோடும் அவர்களின் நன்றியுணர்வை நாய்களோடும் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள். ஏனெனில் அந்தப் பெண்கள் ஏசுவதில் நாய்களைப் போன்று அவர்களுடன் நன்றியுணர்வை காட்டுகிறார்கள். அதன் அசல் வாக்கியத்தை நாம் இப்போது முன்வைத்து தீர்ப்பிற்கான பொறுப்பை வாசகர்களிடமே விட்டுவிடுகிறோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்)அவர்களைப் பற்றிக் கூறுகிறார்கள்:

حــب لـنـــا فـحبّــه فتحبّبُ　　وعـن للنازل و المراتب نرغبُ

انّـى ارىٰ الـدنيـا و بـلـدة اهلها　　جدبت وارض و دادنا لا تجدبُ

يتـمـايلـون عـلـى النعيم و إنّنا　　مـلـنـا الـىٰ وجـه يسر و يطربُ

انـــا تـعلـقنــا بنـور حبيبنـــا　　حتّـى استتار لنا الذى لا يخشب

انّ الـعـداصـاروا خـنـازير الفلا　　وقسـاء هـم من دونهنّ الا كلبُ

سبّــوا و مـا ادرى لايّ جـريـمة　　سبّوا افـعصى الحِبَّ او نتجنّبُ

قسـمــتُ الّــى لن افـارقـه و لو　　مَزَّقت اسـود جشتى او اذءب

دهبـت رياسات الاناس بموتهم

"நமக்கு ஒரு நண்பர் இருக்கின்றார். என் உள்ளம் அவருடைய அன்பில் நிறைந்துள்ளது. எங்களுக்கு பதவிகள் மற்றும் தகுதிகளில் விருப்பம் இல்லை. உலகு மற்றும் அதனை விரும்புபவர்களின் பூமியை வறட்சியில் விரைவில் அழியக் கூடியதாக நான் பார்க்கிறேன். ஆனால் நமது அன்பின் பூமியில் என்றும் வறட்சி ஏற்படாது. மக்கள் இவ்வுலக அருட்களின்பால் செல்கிறார்கள்.





ஆனால் நாங்கள் மகிழ்ச்சியும் மனநிறைவும் தரக்கூடிய ஒரு முகத்திற்கு தலைவணங்கி விட்டோம். எங்களது அன்பிற்குரியவரின் ஒளியுடன் எங்களது தொடர்பு ஏற்பட்டது. இதனால் தூய்மையற்றவர் கூட பிரகாசிக்கத் தொடங்கினார். எதிரிகள் எங்களுடைய காடுகளின் பன்றிகளாகிவிட்டார்கள். மேலும் இவர்களுடைய பெண்கள் நாய்களையும் மிஞ்சிவிட்டார்கள். மேலும் அவர்கள் ஏசுகிறார்கள். ஏசியதன் காரணத்தை நான் அறியேன். நாங்கள் (ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஆகிய) அந்த நண்பரை எதிர்க்க வேண்டுமா? அல்லது அவரை விட்டு விலக வேண்டுமா? இந்த சிங்கங்களும் நரிகளும் என்னை துண்டு துண்டாக ஆக்கினாலும் சரியே. நான் அவரை விட்டு விலக மாட்டேன் என சத்தியம் செய்துள்ளேன்."

(ரூஹானி கஸாயின் பாகம் 14 பக்கம் 53, 54)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதுகிறார்கள்:**

"எனது கடினமான வார்த்தைகள் எதிரிகளின் ஆட்சேபணை களுக்கு மறுமொழியாக இருக்கின்றன.கடின வார்த்தைகளைக் கூறுவது எதிரிகளிடமிருந்துதான் துவங்கியது. எதிரிகளின் கடுஞ்சொற்களை கேட்டும் கூட என்னால் பொறுத்துக் கொள்ள முடியும் என்றாலும் இரண்டு நுண்ணிய நோக்கத்திற்காக நான் (இவ்வாறு) பதிலளிப்பதை பொருத்தமானதாக எண்ணினேன். ஒன்று, எதிரிகள் தமது கடுஞ்சொற்களுக்கான பதிலை கடுஞ்சொல் லில் பெற்று தமது நடைமுறையை மாற்றிக் கொண்டு இனி நாகரிகமாகப் பேச வேண்டும். இரண்டாவது, இந்த எதிரிகளின் மிகமிக கீழ்த்தரமான, கோபமூட்டக்கூடிய சொற்களால் பாமர முஸ்லிம்கள் ஆவேசமடைய வேண்டாம். கடுஞ்சொற்களுக்கான பதிலையும் ஓரளவு கடுஞ்சொற்களில் பெற்று (ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பழித்துப் பேசிய)அவர்கள் சார்பாக கடுஞ்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றால் நமது சார்பாகவும் ஓரளவுக்கு கடுமையாக பதில் கொடுக்கப்பட்டுள்ளது என எண்ணி (பாமர முஸ்லிம்கள்) தமது உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொள்வார்கள். மேலும் காட்டுமிராண்டித்தனமான பழிவாங்குதல்களில் இருந்து தமது கைகளை தடுத்துக் கொள்வார்கள்." (கிதாபுல் பரிய்யா, பக்கம் 11)

எனவே வாசகர்கள் அனைவரிடமும் நாம் விடுக்கும் வேண்டுகோள் என்னவென்றால், ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையின் பெயர்தாங்கி ஆலிம்களின் பொய்யான பேச்சில் நீங்கள் சிக்கிவிடாமல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை நேரடியாகப் படித்துப் பார்த்தால் உங்களுக்கு உண்மை வெட்ட வெளிச்சமாகிவிடும்.

**ஆட்சேபணை எண்:** 5

“என்னுடைய கஷ்ஃபில் ஹழ்ரத் பாத்திமா (ரலி) அவர்கள் தனது தொடையின் மீது என் தலையை வைத்தார்கள்.” (ஆதாரம்: ரூஹானீ ஹஜாயின் பாகம் 18, பக்கம்: 213)

**பதில்:** ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையின் ஆலிம்கள் ஐந்தாம் ஆட்சேபணை வாக்கியத்தையும் மிகமிக பொய்யான முறையில், இந்த ஒரு வரியைப் படித்ததும் பாமர முஸ்லிம்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை வெறுத்து, பொங்கி எழ வேண்டும் என்பதற்காக முன்வைத்துள்ளார்கள். இதற்கு நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்கள் மூலமாகவே இந்த ஆட்சேபணையை தெளிவுபடுத்துகிறோம். இதன்மூலம் இன்ஷாஅல்லாஹ் நீதியை விரும்பும் வாசகர்களுக்கு தெளிவு கிடைத்துவிடும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஒரு கஷ்ஃப் (ஆன்மீகக் காட்சி) தொடர்பாக இவ்வாறு கூறுகிறார்கள்:

براہین احمدیہ میں یہ کشف بایں الفاظ درج ہیں۔" اور ایسا ہی الہام متذکرہ بالا میں جو آل رسول پر درود بھیجنے کا حکم ہے۔ سو اس میں سرّ یہی ہے کہ افاضہ انوار الٰہی میں محبت اہل بیعت کو بھی بہت عظیم دخل ہے اور جو شخص حضرت احدیت کے مقربین میں داخل ہوتا ہے وہ انہیں طیبین طاہرین کی وراثت پاتا ہے۔ اور تمام علوم و معارف میں ان کا وارث ٹھہرتا ہے۔ اس جگہ ایک نہایت روشن کشف یاد آیا۔ اور وہ یہ ہے کہ ایک مرتبہ نماز مغرب کے بعد عین بیداری میں ایک تھوڑی سی غیبت جس سے جو خفیف سے نشا سے مشابہ تھی ایک عجیب عالم ظاہر ہوا کہ ایک دفعہ چند آدمیوں کے جلد جلد آنے کی آواز آئی جیسی سرعت چلنے کی حالت میں پاؤں کی جوتی اور موزہ کی آواز آتی ہے۔ پھر اسی وقت پانچ آدمی نہایت وجیہہ اور مقبول اور





خوبصورت سامنے آگئے۔ یعنی جناب پیغمبر خدا صلی اللہ علیہ وسلم و حضرت علیؓ و حسنینؓ و فاطمہ زہرا رضی اللہ عنہم اجمعین۔ اور ایک نے ان میں سے اور ایسا یاد پڑتا ہے کہ حضرت فاطمہ رضی اللہ عنہا نے نہایت محبت اور شفقت سے مادر مہربان کی طرح اس عاجز کا سر اپنی ران پر رکھ لیا۔ پھر بعد اس کے ایک کتاب مجھ کو دی گئی جس کی نسبت یہ بتلایا گیا کہ یہ تفسیر قرآن ہے جس کو علیؓ نے تالیف کیا ہے۔ اور اب علیؓ وہ تفسیر تجھ کو دیتا ہے۔ فالحمدللہ علیٰ ذلک" (براہین احمدیہ صفحہ ۵۷۶ تا ۵۷۷ حاشیہ در حاشیہ نمبر ۳)

“பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலில் இந்த ஆன்மீகக் காட்சி இந்த சொற்களில் குறிப்பிடப்பட்டுள்ளது: மேலும் இவ்வாறே மேற்காணும் இறையறிவிப்பில் நபி(ஸல்) அவர்களின் குடும்பத்தார் மீது ஸலாவத்து ஓதுமாறு கட்டளை உள்ளது. இதில் உள்ள இரகசியம் என்னவென்றால், இறை ஒளியை அடைவதில் அன்னாரின் குடும்ப நேசம் பெரும் பங்கு வகிக்கிறது. எவர் ஒருவர் அன்னாரது குடும்பத்தாரின் நெருக்கத்தை பெறுகிறாரோ அவர் தூயவான்களை வாரிசாகப் பெறுகிறார். அனைத்து நுட்ப ஞானங்களிலும் இறைஞானங்களிலும் தூயவர்களின் வாரிசாகிறார். இந்த இடத்தில் ஒரு மிகத் தெளிவான கஷ்ஃப் நினைவுக்கு வருகிறது. அது, ஒருமுறை மக்ரிபிற்குப் பின் சரியாக, ஒருவித சிறிய மயக்க நிலைக்கு ஒப்பாக, விழிப்புணர்வில் ஒரு வியப்பான உலகம் தென்பட்டது. மனிதர்கள் செல்லும்போது கேட்கும் காலடி ஓசையோடு சில மனிதர்கள் வேகமாக வரும் ஓசை கேட்டது. பின்பு அந்நேரம் மிகமிக நேர்த்தியான விரும்பத்தக்க அழகிய ஐந்து பேர் முன்னால் வந்தனர். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள்,ஹஸ்ரத் ஹஸன் (ரலி), ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள். அவர்களில் ஒருவர் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் என ஞாபகமிருக்கிறது. அவர் மிகுந்த அன்பு மற்றும் பாசத்தோடு **பரிவான தாயைப் போல்** இந்த எளியவனது தலையை தமது மடிமீது வைத்துக் கொண்டார்கள். இதன்பின்பு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களால் எழுதப்பட்ட திருக்குர்ஆன் விளக்கவுரை இப்போது

ஹஸ்ரத் அலி(ரலி) அவர்கள் உங்களிடம் தருகிறார் என்று கூறப்பட்டவாறு ஒரு நூல் எனக்கு வழங்கப்படுகிறது. எல்லாப் புகழும் இறைவனுக்கே உரியது.'' (பராஹீனே அஹ்மதிய்யா, பக்கம் 599, அடிக்குறிப்பின் கீழ் அடிக்குறிப்பு எண் :3 )

எனவே இந்த வாக்கியங்களில் எந்த அளவு தெளிவாக தம்மை ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் மகனாக குறிப்பிட்டுள்ளார்கள் என்பதைப் பாருங்கள்!

இப்போது இந்த எதிரிகள் சையது அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் கீழ்க்காணும் கஷ்ஃப் காட்சிக்கு என்ன விளக்கம் தரப் போகிறார்கள்!

قال رضی اللہ عنہ رأيت في المنام كاني في حجر عائشة ام المؤمنين رضی اللہ عنها
وانا ارضع لديها الايمن ثم اخرجت لديها الايسر فرضعته فدخل رسول الله صلعم.
(قلائد الجواہر فی مناقب الشیخ عبدالقادر صاحب جیلانی مطبوعہ مصر ص ۵۷ سطر ۸)

“ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: நான் கனவில், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் மடியில் இருந்து கொண்டு அவர்களின் வலது மார்பை உறிஞ்சினேன். பின்பு நான் இடது மார்பை வெளியே எடுத்து உறிஞ்சினேன். அந்த வேளையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உள்ளே வருகை தந்தார்கள்.'' (கலாயிதுல் ஜவாஹிர் ஃபீ மனாகிபிஷ் ஷேக் அப்துல் காதிர் ஜீலானி, எகிப்து வெளியீடு, பக்கம்:57, வரி 8)

இப்போது கூறுங்கள். இதில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு இழிவு ஏற்பட்டு விடவில்லையே? சுப்ஹானல்லாஹ்! பாசமிக்க தாயாக, அறிவு ஞானத்தின் கடலாக பொருள் கொள்ளப்படும் இந்த கண்ணியவான்களின் கஷ்ஃப் காட்சிகள் எவ்வளவு உயர்வானவை! ஆனால் அசுத்த இயல்பைக் கொண்ட இன்றைய ஆலிம்களுக்கு அந்த ஞானத்திற்கு எல்லாம் ஏது கொடுப்பினை?!

**ஆட்சேபணை எண் :** 6

“காதியான் என்ற ஊருக்கு என்னை நபியாக அனுப்பியவனே உண்மையான இறைவன் ஆவான்.''

(ஆதாரம்: ரூஹானீ ஹஸாயின் பாகம் 18 பக்கம் 231)





**பதில் :** ஆதாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பக்கத்தில் இப்படி ஒரு வாக்கியம் இல்லை. அந்த பக்கத்திலுள்ளதை நீங்களே படியுங்கள்:

“இந்த வியத்தகு உயிர் கொல்லி கிருமியிடமிருந்து அரசாங்கம் பாதுகாப்பு தருவதில் எந்த வியப்பும் இல்லை. ஆனால், அது இறை அடையாளம் ஆகாது. அது இறை அடையாளம் ஆக வேண்டுமென்றால், இதேபோல் கிறித்தவர்கள் கல்கத்தாவில் பிளேக் நோய் பரவாது என முன்னறிவிப்பு செய்ய வேண்டும். ஏனென்றால் பிரிட்டிஷ் இந்தியாவின் மிகப் பெரிய பிஷப் கல்கத்தாவில்தான் இருக்கிறார். அதே போல் மியான் ஷம்ஸுத்தீன் மற்றும் அவருடைய அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம் அமைப்பின் உறுப்பினர்கள் லாஹூரைப் பற்றி, அது பிளேக் நோயிலிருந்து பாதுகாக்கப்பட்டது என முன்னறிவிக்கட்டும். மேலும் தமக்கு இல்ஹாம் இறங்கியுள்ளது என வாதிக்கும் முன்ஷீ இலாஹி பக்ஷ் அகவுண்டன்ட் அவர்களுக்கும் இதுதான் சந்தர்ப்பம். தனது இல்ஹாமினால் முன்னறிவித்து அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாமிற்கு அவர் உதவி புரியட்டும். மேலும் அப்துல் ஜப்பார் மற்றும் அப்துல் ஹக் ஆகியோர் அமிர்தரஸைப் பற்றி முன்னறிவிக்கட்டும். வஹாபி பிரிவின் ஆணிவேர் தில்லியில் உள்ளதால் நதீர் ஹுஸைன் மற்றும் முஹம்மது ஹுஸைன் ஆகியோர் தில்லி பிளேக் நோயிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் என்று முன்னறிவிக்க வேண்டும். இவ்வாறு முழு பஞ்சாபும் இந்த உயிர் கொல்லி நோயிலிருந்து பாதுகாப்பு பெற்றுவிடும். அரசாங்கத்திற்கு தடுப்பு நடவடிக்கைகள் இலவசமாக நடந்துவிடும். இவர்கள் இவ்வாறு செய்யவில்லை என்றால் பிறகு காதியானில் தனது தூதரை அனுப்பிய இறைவனே உண்மையான இறைவன் எனக் கருதப்படும்.

இறுதியாக முஸ்லிம்களைச் சார்ந்த இல்ஹாமைப் பெறக்கூடியவர்கள், ஆரியர்களைச் சார்ந்த பண்டிதர்கள், கிறித்தவர்களைச் சார்ந்த பாதிரிமார்கள் ஆகியோர் உட்பட இவர்கள் அனைவரும் அமைதியாக இருப்பார்களேயானால் இவர்கள் அனைவரும் பொய்யர்கள் என்பதும் காதியான் ஓர் உண்மையாளரின் இடம் என சூரியனைப் போன்று பிரகாசிக்கும் ஒரு நாள்

வரவிருக்கின்றது என்பதும் நிரூபணமாகிவிடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இறுதியாக மியான் ஷம்ஸுத்தீன் ஸாஹிப் அவர்களுக்கு நினைவிருக்கட்டும்! அவர் தன்னுடைய அறிக்கையில் இவ்வசனத்தை - துன்பத்திற்காளானவர்களுக்கு பதிலளிப்பது எவன்? (திருக்குர்ஆன் 27:63) எழுதியுள்ளார். மேலும் தனது துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதில் நம்பிக்கை வைத்துள்ளார். இந்த நம்பிக்கை சரியல்ல. ஏனென்றால் இறை வேதத்தில் வரும் முஸ்தர் (துன்பத்திற்காளானவர்) என்ற சொல் சோதவையின் காரணமாக துன்பத்திற்காளானவர்களை குறிக்கும். தண்டனை அனுபவிப்பவர்களை குறிக்காது. ஆனால் எவர் தண்டனையின் காரணமாக துன்பத்திற்காளாக்கப்பட்டாரோ அவர் இந்த வசனத்திற்கு பொருத்தமானவர் அல்ல. அப்படியிருந்தால் நூஹ் நபியின் சமுதாயம் மற்றும் லூத் நபியின் சமுதாயம் மற்றும் ஃபிர்அவ்னின் சமுதாயம் ஆகியோரின் பிரார்த்தனைகள் அவர்கள் துன்பத்திற்குள்ளான போது கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை. இறைவனின் கரங்கள் இந்த சமுதாயங்களை அழித்துவிட்டது." (ரூஹானி கஸாயின், பாகம் 18, பக்கம் 231)

இந்த வாக்கியங்களிலிருந்து காதியான் பிளேக் நோயிலிருந்து பாதுகாப்பு பெறும் என்று அன்னார் இறைவன் புறமிருந்து அறிவைப் பெற்று அறிவித்தார்கள் என்பது தெளிவாகிறது.பின்பு நிகழ்ந்த சம்பவங்களும், காதியானில் தனது தூதரை தோற்றுவித்த இறைவனே உண்மையான இறைவன் என்பதை நிரூபித்தன. இல்லையென்றால் கல்கத்தா, அமிர்தரஸ், லாஹூர், தில்லியில் வசிக்கும் எதிர்தரப்பு பாதிரிமார்கள், மவ்லவிமார்கள் தத்தமது நகரின் பாதுகாப்பிற்கான எந்த முன்னறிவிப்பையும் ஏன் அறிவிக்கவில்லை?

**ஆட்சேபணை எண் : 7**

" நான் எனது கஷ்ஃபில் என்னை இறைவனாக இருக்கக் கண்டேன். மேலும் நான் அல்லாஹ்தான் என்று உறுதியும் கொண்டேன்." (ஆதாரம்: ரூஹானீ ஹஸாயின் பாகம் 13 பக்கம் 103)

**பதில் :** இது ஒரு கனவாகும். கனவு என்று அவர்களே குறிப்பிட்டும் இருக்கிறார்கள். கனவு மற்றும் கஷ்ஃப் காட்சிகளுக்கு





நேரடியாக பொருள் கொள்வது மூடத்தனமாகும். அதன் அடிப்படையில் காலத்தின் மகத்தான ஓரிறை கொள்கை உடையவர் மீது ஷிர்க் குற்றச்சாட்டு சுமத்துவது முற்றிலும் கொடுமையாகும். எதிரிகள் எந்த நூலிலிருந்து இந்த வார்த்தையை எடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனுக்கு நிகராக தன்னை கூறியுள்ளார்கள் என நிரூபிக்க முயன்றுள்ளார்களோ அதே நூலில் அந்த இடத்தில், இவ்வாறான இறையறிவிப்புகள் ஓர் இறை அடியாருக்குக் கிடைத்தால் அவற்றிற்கு நேரடி பொருள் கொடுக்கப்படுவதில்லை என்பதையே மிர்ஸா ஸாஹிப் நிரூபிக்கின்றார்கள். இந்த விஷயத்தை மறைப்பது எந்த அளவுக்கு அநீதி! மேலும் கிறித்தவர்களை நோக்கிக் கூறுகிறார்கள்: இயேசுவிற்கு கிடைக்கப்பெற்ற எந்த இறையறிவிப்புகளிலிருந்து அவரை நீங்கள் கடவுளாக்குகின்றீர்களோ அவற்றை விட அதிகதிகமாக எனக்கும் இறையறிவிப்புகள் கிடைக்கின்றன. இதைவிட அதிகமாக எமது எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறையறிவிப்புகள் கிடைத்தன. அவற்றின் மூலமாக அன்னாரை பெரும் கடவுளாக நிரூபிக்க முடியும். அவ்வாறு இருந்தும் இந்த இறையறிவிப்புகளுக்கு நேரடிப் பொருள் கொடுத்து தூய நபி (ஸல்) அவர்கள் நவூதுபில்லாஹ் தமக்கு இறைவன் என்ற அந்தஸ்தை வழங்காதிருக்கும் போது இயேசுவின் இறைமை (கடவுள் தன்மை) எவ்வாறு நிரூபணமாகும்?என்று கிறித்தவர்களைப் பார்த்து ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் கேட்கிறார்கள். அசல் வாக்கியத்தை கீழே தருகிறோம்:

"நான் எனது **ஒரு கஷ்ஃபில்** (ஆன்மீகக் காட்சியில்) என்னை இறைவனாகப் பார்த்தேன். இறைவன் தான் என உறுதி கொண்டேன்.எனக்கென எந்த விருப்பமும், எந்த எண்ணமும் எந்த செயலும் இருக்கவில்லை. நான் துளையுடைய ஒரு பாத்திரத்தைப் போல் ஆகிவிட்டேன். அல்லது ஒரு பொருள் தன்னுள் அடக்கிக் கொண்ட மற்றொரு பொருளைப் போல் ஆகிவிட்டேன். எந்த அளவுக்கென்றால், அந்தப் பொருளின் எந்த அடையாளமும் எஞ்சியிருக்கவில்லை.அந்த சந்தர்ப்பத்தில் அல்லாஹ்வின் ரூஹ் என்னை சூழ்வதாக பார்க்கிறேன். எனது உடலில் அந்த ரூஹ்

முற்றிலுமாக ஆட்கொண்ட பின்பு எனது உடலை பார்க்கிறேன். எனது கைகள் அவனது கைகளாக, எனது கண் அவனது கண்ணாக, எனது காது அவனது காதாக, எனது நாவு அவனது நாவாக மாறியிருந்தது. முற்றிலும் அவனுள் மாய்த்துவிடும் அளவுக்கு எனது இறைவன் என்னைப் பிடித்தான். அவனது வல்லமை மற்றும் ஆற்றல் என்மீது ஆர்ப்பரிக்கிறது. அவனது இறை பண்பு என்னுள் அலைமோதவும் கண்டேன் . கண்ணியமிக்க (இறை)வனின் கூடாரம் என் உள்ளத்தின் நாலாப்புறமும் நாட்டப்பட்டது. வல்லமைமிக்க அரசன் எனது உள்ளத்தை தூளாக்கிவிட்டான். இவ்வாறு நான் நானாக இல்லை. எனது எந்தவொரு சொந்த விருப்பமும் எஞ்சியிருக்கவில்லை. எனது கட்டடம் விழுந்து விட்டது. மேலும் ரப்புல் ஆலமீன் கட்டடம் தென்படத் துவங்கியது. இறை பண்பு மிக அழுத்தமாக என்மீது மேலோங்கியது. நான் உச்சி முதல் உள்ளங்கால் வரை அவன் பக்கம் ஈர்க்கப்பட்டேன்.

பின்னர் மூடப்படாத ஒரு உட்பொருளைப் போல் நான் ஆகிவிட்டேன். மேலும் தூசியில்லாத எண்ணெய் போல் ஆகிவிட்டேன். எனக்கும் என் நஃப்ஸிற்குமிடையே பிளவு ஏற்படுத்தப்பட்டது. எனவே நான் கண்ணிற்கு தென்படாத பொருளைப் போல் ஆகிவிட்டேன் அல்லது ஆற்றில் கலந்த நீர்த்துளி ஆற்றில் மறைந்து போவதைப் போல் ஆகிவிட்டேன். இந்நிலையில் இதற்குமுன் நான் என்னவாக இருந்தேன் . மேலும் என்னுடைய வடிவம் என்னவாக இருந்தது என்பதை நான் அறியவில்லை. இறைபண்பு என் நாடிகளிலும் நரம்புகளிலும் ஊடுருவி விட்டது. மேலும் நான் என்னிடமிருந்து முழுமையாக தொலைந்து விட்டேன். மேலும் அல்லாஹ் எனது அனைத்து உறுப்புகளையும் தன் பணிகளில் ஈடுபடுத்தினான். மேலும் எந்த அளவிற்கு வலிமையுடன் என்னை கைப்பற்றினான் என்றால் இதைவிட அதிகம் சாத்தியமில்லை. எனவே அவனுடைய கைப்பிடியில் நான் ஒன்றுமில்லாமல் போனேன். மேலும் நான் அந்த நேரத்தில் என்னுடைய உறுப்புகளை என்னுடையதல்ல; மாறாக அல்லாஹ்வின் உறுப்புகள் என்று உறுதி கொண்டேன். மேலும் எனது ஆற்றல்கள் ஒன்றுமில்லாமல் போனது. எனது வடிவத்திலிருந்து நான் முற்றிலும் வெளியேறி விட்டேன். இனி





எந்தவொரு இணையும், தடுக்கக்கூடியவனும் இல்லை என நான் எண்ணினேன். இறைவன் என்னுள் நுழைந்துவிட்டான். மேலும் என்னுடைய கோபம் மற்றும் மென்மை, தன்னடக்கம், அசைவு மற்றும் அமைதி அனைத்தும் அவனுடையதாகி விட்டது. அந்நிலையில் நான், நாம் ஒரு புதிய திட்டம், புதிய வானம் மற்றும் புதிய பூமியை விரும்புகிறோம் எனக் கூறினேன்.எனவே நான் வானத்தையும் பூமியையும் மொத்தமாக படைத்தேன். அந்தப் படைப்பில் எந்தவொரு ஒழுங்குமுறையோ அல்லது வேறுபாடோ இருக்கவில்லை. பிறகு நான் உண்மையின் விருப்பத்திற்கேற்ப அதனை ஒழுங்குபடுத்தினேன்; வேறுபடுத்தினேன். மேலும் நான் அதன் படைப்பின் மீது என்னை ஆற்றல் பெற்றவனாகக் கண்டேன். பின்னர் நான் வானத்தையும் உலகத்தையும் படைத்தேன். மேலும் கூறினேன்: நிச்சயமாக நாம் கீழ் வானத்தை விளக்குகளைக் கொண்டு அழகுப்படுத்தினோம். பின்னர் நான் கூறினேன். இப்பொழுது நாம் மனிதனை மண்ணின் தொகுப்பிலிருந்து படைப்போம். பின்னர் எனது நிலை கஷ்ஃபிலிருந்து இல்ஹாமின் பக்கம் மாறியது. பின்னர் எனது நாவில், "அரத்து அன் அஸ்தக்லிஃப ஃப கலக்த்து ஆதம. இன்னா கலக்னல் இன்ஸான ஃபீ அஹ்ஸனி தக்வீம் என வெளிப்பட்டது. அதாவது நான் (பூமியில்) கலீஃபாவை உருவாக்க எண்ணினேன். எனவே ஆதமை படைத்தேன். நிச்சயமாக நாம் மனிதனை சிறந்த முறையில் படைத்துள்ளோம்."

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த ரூஹ்யாவின்(ஆன்மீகக் காட்சியின்) காரணத்தால் அன்னார் மீது இணைவைப்பவன் என்ற குற்றம் சாட்டப்படுகிறது என்றால் மேலும் அன்னார் தன்னை இறைவன் என வாதித்தது நிரூபணமாகிறது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இந்த ஹதீஸில் கூறுவதைப் பற்றி இவர்களின் கருத்து என்ன?

ஹஸ்ரத் நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

"رأيت ربی فی صورة شاب امرد قطط له وفرة من شعر وفی رجليه نعلان من ذهب."

(الحديث)(اليواقيت والجواہر جلد اوّل ص ٧١ بحوالہ طبرانی نیز موضوعات کبیر ص ٤٦)

“நான் என் இறைவனை ஒரு இளைஞனின் வடிவத்தில் பார்த்தேன். அவனுக்கு நீண்ட முடியும், அவனது கால்களில் தங்க காலணிகள் இருந்தன.” (அல்யவாகீது வல் ஜவாஹிரு பாகம் 1 பக்கம் 71, திப்ரானி மற்றும் மவ்ஸூஆதே கபீர் பக்கம் 46)

இக்காரணத்தைக் கொண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஆட்சேபணை செய்பவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் இணைவைக்கும் குற்றத்தை சுமத்தி அன்னாரை விட்டு விலகி விடுவார்களா?

இந்தக் கேள்விக்குரிய பதில், இந்த ஹதீஸ் உண்மையில் ஒரு கனவாகும். மேலும் கனவு உலகத்தில் உருவமில்லாத பொருட்களுக்கும் உருவம் கிடைப்பதுண்டு என்பதைத் தவிர வேறு எந்த பதிலும் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கஷ்ஃபும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கஷ்ஃபும் ஒன்றுபட்டுள்ளது.

பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே இந்த கஷ்ஃபிற்கு விளக்கமும் அளித்துள்ளார்கள். ஆனால் ஆட்சேபணை செய்பவர்கள் அறிந்தும் அதனைப் புறக்கணித்து விட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“நாங்கள் இந்த கஷ்ஃபிற்கு வஹ்ததுல் வஜூது (அத்வைதக் கொள்கையுடையவர்கள்) மற்றும் ஹலூல் (மனிதர்களுள் இறைவன் தோன்றுவான்) என்ற கொள்கையுடையவர்களைப் போல் பொருள் தருவதில்லை. மாறாக இந்த கஷ்ஃப் புகாரியில் நஃபில் தொழுபவர்களின் இறை நெருக்கத்தை குறிக்கும் ஹதீஸிற்கு முற்றிலும் ஒத்ததாக இருக்கிறது.”

புகாரியில் வரும் ஹதீஸ்:

“நஃபில் தொழும் அடியான் என்னுடைய நெருக்கத்தில் எந்த அளவு முன்னேற்றம் அடைந்து கொண்டே இருக்கின்றான் என்றால், நான் அவனை நேசிக்கத் துவங்குகிறேன். அப்பொழுது நான் அவன் கேட்கின்ற காதாக ஆகிவிடுகின்றேன். அவன் பார்க்கின்ற கண்களாகிவிடுகிறேன்; அவன் பிடிக்கின்ற கைகளாகிவிடுகிறேன்; அவன் நடக்கின்ற கால்களாகி விடுகிறேன்.”

இந்த ஹதீஸிற்கு என்ன பொருள் தருவீர்களோ அதே பொருள் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களின் கஷ்ஃபின் பொருளுமாகும்.





**ஆட்சேபணை எண் : 8**

“நான் முதலில் வானம் பூமியை மொத்தமாகப் படைத்துவிட்டு பிறகு தனித்தனியாக ஆக்கினேன்.”

(ஆதாரம்: ரூஹானீ ஹஸாயின் பாகம் 13 பக்கம் 105)

**பதில் :** இதுவும் ஓர் ஆன்மீகக் காட்சியாகும். இதற்கான பதிலும் மேலே தரப்பட்டுள்ளது. இந்தக் காட்சியைப் பற்றி எதிரிகள், ஹஸ்ரத் மிர்ஸா ஸாஹிப் வானம் பூமியை படைத்ததாக வாதித்துவிட்டதாக கூறுகின்றனர். நினைவில் கொள்ளுங்கள். இந்த இயற்கையான வானமும் பூமியும் ஏற்கனவே படைக்கப்பட்ட ஒன்றாகும். அவற்றைப் படைத்ததாக அவர்கள் வாதம் புரியவில்லை என்பது மட்டுமின்றி இது சாத்தியமற்றதுமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களே கூறுகிறார்கள்:

“இந்த பிரபஞ்சத்தை (வானம், பூமி, உலகம்) ஒரு தொன்மையான, வல்லமையுடைய மற்றும் மதிப்பிற்குரிய இறைவன் படைத்தான். அவன் அனைத்து வெளிப்படையான வற்றின் மீதும், மறைவானவற்றின் மீதும் ஆற்றல் உடையவன் என்று நான் உறுதியான உள்ளத்துடன் நம்பிக்கை கொண்டுள்ளேன்.”

உண்மை இவ்வாறிருந்தும் நபிமார்களின் நடைமுறையைப் போல் ஒரு ஆன்மீக வானம், பூமியைப் படைத்ததாக அன்னாரது வாதம் உள்ளது. எல்லா நபிமார்களும் அப்படிப்பட்ட ஆன்மீக வானத்தையும் பூமியையும் படைத்துள்ளார்கள். சந்தேகத்திற்கு இடமின்றி அன்னாரும் அத்தகைய ஒரு வானத்தையம் பூமியையும் படைத்துள்ளார்கள். அந்த வானம், பூமி ஆன்மீகமானதாகும். அன்னார் கூறுகிறார்கள்:

“ஒவ்வொரு மாபெரும் சீர்த்திருத்தவாதி தோன்றும் வேளையில் ஆன்மீக ரீதியான ஒரு புதிய வானம், பூமி படைக்கப்படுகின்றது.” (ஹகீகத்துல் வஹி, பக்கம் 99)

இவ்வாறான புதிய வானம், புதிய பூமி ஒவ்வொரு நபியின் காலத்திலும் படைக்கப்பட்டு வருகிறது. எனவே தான் பைபிளில் பேதுருவின் வார்த்தைகள் இன்றுவரை இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

“அந்த வாக்குறுதிக்கேற்ப நல்லவர்கள் வசிக்கக்கூடிய புதிய வானம் மற்றும் பூமியை எதிர்நோக்கியுள்ளோம்.” (பேதுரு 2-3:13)

மேலும் திருக்குர்ஆனும் நிலத்திலும் நீரிலும் குழப்பம் பரவியுள்ளது (30:42) என்பதில் இதன் பக்கமே சுட்டிக் காட்டுகிறது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் பிரம்மாண்டமான புதிய வானமும் புதிய பூமியும் படைக்கப்படும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“ஒரு முறை நான் **கஷ்ஃப் காட்சியில்**, நான் புதிய பூமியையும் வானத்தையும் படைப்பதாக கண்டேன். பின்பு இப்போது மனிதனைப் படைக்கப் போகிறோம் எனக் கூறினேன். இதற்கு இந்த அறிவற்ற மவ்லவிகள், பாருங்கள் இவர் இறைவாதம் புரிந்து விட்டார் என கூச்சலிடுகின்றனர். இந்த கஷ்ஃப்(ஆன்மீகக்)காட்சிக்கான விளக்கம், இறைவன் எனது கையால் வானமும் பூமியும் புதிதாகி உண்மையான மனிதர்கள் தோன்றும் அளவிலான மாற்றத்தை ஏற்படுத்துவான் என்பதாகும்.”(சஷ்மயே மஸீஹீ, ரூஹானி கஸாயின் பாகம் 20 பக்கம் 275-276 அடிக்குறிப்பு)

**ஆட்சேபணை எண் : 9**

“எனது வஹீக்கு தோதுவான ஹதீஸ்களை எடுத்துக் கொள்வோம். மற்றவைகளை குப்பைகளைப் போன்று எறிந்து விடுவோம்.” (ஆதாரம்: ரூஹானீ ஹஜாயின் பாகம் 19 பக்கம் 140)

**பதில் :** இதுவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் எழுதப்பட்டவற்றின் சொல் மற்றும் பொருளை திரித்து வெளியிடப்பட்ட ஆட்சேபணையாகும். நபிமொழியின் அடிப்படையில் வரவிருக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஹகம் (நீதித் தீர்ப்பு வழங்குபவர்) என பெயரிடப்பட்டுள்ளது. அவர் முரண்பாடுகளுக்கு தீர்ப்பு வழங்குவார். மேலும் திருக்குர்ஆன் மூலமாகவும் அவ்வப்போது தமக்கு கிடைக்கும் வஹியின் மூலமாகவும் சரியானது, தவறானது பற்றி தீர்ப்பு வழங்குவார். முழு வாக்கியத்தையும் படித்தால் இந்த எதிரிகளின் சூழ்ச்சி வெளிச்சமாகிவிடும். அசல் வாக்கியத்தை கீழே தருகிறோம்:

சில தந்திரக்கார மவ்லவிகள், ஒருவர் வானத்திலிருந்து இறங்கி வந்து நீங்கள் ஏற்கின்ற இன்ன இன்ன நபிமொழிகள் சரியானவையல்ல என்று கூறினால் அதை நாங்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம்; அவரது கன்னத்தில் ஓங்கி அறைந்துவிடுவோம் எனக்





கூறுகின்றனர். இதற்கான பதில் ஆம்! மவ்லவிகளே! உங்களிடம் இதுதான் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் வரவிருக்கும் மஸீஹ் பற்றி சஹீஹ் புகாரியில் ஹகம் (நியாயத் தீர்ப்பு வழங்குபவர்) என்று வந்துள்ளதே, இதற்கு என்ன பொருள் கொடுக்கப் போகிறீர்கள் என்பதே எங்களது பணிவான கேள்வி. ஹகம் என்பதன் பொருள் முரண்பாடு மேலோங்கும்போது அதற்கான தீர்ப்பு வழங்குபவராக அவரை ஏற்று, அவர் ஆயிரம் நபிமொழிகளைக் கூட பலவீனமானதாக அறிவித்தாலும் அவரது தீர்ப்பை மறுபேச்சின்றி ஏற்பது என்று தான் நாங்கள் இதுவரை புரிந்து வைத்திருக்கின்றோம். இறைவன் புறமிருந்து வரக்கூடியவர் உங்களிடம் அறை வாங்க வருவதில்லை, இறைவனே அவருக்கான வழிகளை திறந்துவிடுவான். எவருக்கு இறைவன் கஷ்ஃப் மற்றும் இல்ஹாம்களை வழங்கி, பெரிய பெரிய அடையாளங்களை அவரது கையால் வெளிப்படுத்தி, திருக்குர்ஆன் அடிப்படையில் ஒரு வழியையும் காண்பித்திருக்கின்றானோ, அவர் சில சந்தேகத்திற் குரிய நபிமொழிகளுக்காக அந்த பிரகாசமான உறுதியான வழியை எவ்வாறு விட்டு விடுவார்?

எந்த ஒன்றை இறைவன் அவருக்கு வழங்கியுள்ளானோ அதன்படி செயலாற்ற வேண்டியது அவர்மீது கடமையில்லையா? இறைவனது தூய வஹியோடு நபிமொழியின் ஏதேனும் கருத்து முரண்பட்டால், தனது வஹியை திருக்குர்ஆன் அடிப்படையில் கண்டால், சில நபிமொழிகளையும் அதற்கு ஆதரவாகக் கண்டால் திருக் குர்ஆனுக்கு இணக்கமானவையாகவும், தனது வஹிக்கு எதிரானவை யாகவும் இல்லாதிருக்கின்ற அந்த ஹதீஸுகளை ஏற்றுக் கொண்டு ( குர்ஆனுக்கும் சஹீஹான ஹதீஸுகளுக்கும் தமது வஹிக்கும் முரண்பட்ட) பிற ஹதீஸுகளை விட்டு விடுவது அவர் மீது கடமையில்லையா? ... பின்பு மவ்லவி ஸனாவுல்லா ஸாஹிப் கூறுகிறார்: உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹின் முன்னறிவிப் பைப் பற்றிய எண்ணம் உள்ளத்தில் எப்படி வந்தது? இறுதியில் அது நபிமொழிகளிலிருந்து எடுக்கப்பட்டவை தானே? அப்படியென்றால் நபிமொழிகளின் மற்ற அடையாளங்கள் ஏன் ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை? என்று கேட்கிறார். இதற்கு நமது பதில், இந்த பாமரர்கள் ஒன்று இட்டுக்கட்டி அவ்வாறு கூறுகின்றனர். அல்லது மடமையால் அவ்வாறு கூறுகின்றனர். நாம் இதற்கான பதிலாக

இறைவன் மீது ஆணையிட்டு கூறுகிறோம். எனது இந்த வாதத்திற்கு ஹதீஸ் அடிப்படையல்ல. மாறாக திருக்குர்ஆனும் என்மீது இறங்கிய வஹியுமாகும். ஆம்! திருக்குர்ஆனுக்கு ஏற்றதும் என்மீது இறங்கிய வஹிக்கு முரண்படாத ஹதீஸ்களையும் சாதகமாக நாம் எடுத்து வைக்கிறோம். மற்ற நபிமொழிகளை நாம் பயனற்றதாகக் கருதி எறிந்து விடுகிறோம்.'' (ரூஹானி கஸாயின், பாகம் 19, பக்கம் 139)

பார்த்தீர்களா! ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையின் மவ்லவிமார்கள் ஒரு கோடி ரூபாய் பரிசை பொய்யின் வடிவமாகிய தட்டில் வைத்து முன் வைத்திருக்கிறார்கள்!! அன்னாரோ திருக்குர்ஆனுக்கு உடன்பாடுள்ள நபிமொழிகளை பின்பற்றுமாறும் திருக்குர்ஆனின் போதனைக்கு முரணான ஹதீஸ்களை வீணானவையாகக் கருதி விட்டுவிடுமாறும் கூறியுள்ளார்கள். அன்னார் குர்ஆன் வஹியின் மீது எவ்வாறு நம்பிக்கை கொண்டிருந்தார்களோ அவ்வாறே தமது வஹியின்மீதும் உறுதியாக நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அன்னார் தமது வஹிக்கு எதிரான நபிமொழியை விட்டுவிடுமாறு கூறியிருப்பது திருக்குர்ஆனின் போதனைக்கு எதிரானதல்ல.நபிமொழிகளின் முக்கியத்துவத்தைப் பொருத்தவரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"ஆம், **நேர்வழிக்கான மூன்றாவது வழி நபிமொழியாகும்**. ஏனெனில் மிகுதியான இஸ்லாமிய வரலாறு, நன்னடத்தை மற்றும் மார்க்க சட்டங்களை நபிமொழிகள் விளக்குகின்றன. மேலும் **நபிமொழியின் பெரும்பயன் அது குர்ஆன் மற்றும் சுன்னத்தின் ஊழியனாக இருப்பதுதான்.** இவ்வாறான சந்தர்ப்பத்தில் குர்ஆனை மதிக்கத் தெரியாதவர்கள் யூதர்கள் தமது ஹதீஸை ஆக்கிக் கொண்டதைப் போல் நபிமொழியை திருக்குர்ஆனின் நீதிபதியாக்குகின்றனர். ஆனால் நாம் நபிமொழியை திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தின் ஊழியனாகவே கருதுகிறோம். மேலும் எஜமானுக்கு ஊழியர்கள் இருந்தால்தான் மதிப்பு அதிகரிக்கும் என்பது தெரிந்த விஷயம்தான். குர்ஆன் அல்லாஹ்வின் சொல்லாகும், சுன்னத் அல்லாஹ்வின் தூதருடைய செயலாகும், ஹதீஸ் சுன்னத்திற்கு ஆதரவளிக்கும் சாட்சியாகும்.... எனவே நபிமொழியை மதிக்கவில்லையென்றால் அது இஸ்லாத்தின் ஒரு உறுப்பை துண்டித்தது போலாகிவிடும். குர்ஆன் மற்றும்





சுன்னத்திற்கு முரண்படுகின்ற ஹதீஸ் அதுபோன்றே திருக்குர்ஆனுக்கு உடன்பாடான ஒரு ஹதீஸுக்கு எதிரான ஒரு ஹதீஸ் ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று. உதாரணமாக ஸஹீஹ் புகாரிக்கு முரண்படுகின்ற ஹதீஸ்கள் ஏற்றுக் கொள்வதற்குரிய தகுதியற்றவையாகும். ஏனென்றால் அதை ஏற்பதால் குர்ஆனையும், குர்ஆனுக்கு உடன்பாடான அனைத்து நபிமொழிகளையும் கைவிட வேண்டிவரும். மேலும் குர்ஆனுக்கும், சுன்னத்திற்கும், திருக்குர்ஆனுக்கு உடன்பாடான ஹதீஸுக்கும் முரண்படுகின்ற ஒரு ஹதீஸை நியாய உணர்வுள்ள எவரும் ஏற்றுக் கொள்ளத் துணிய மாட்டார் என்பதை நான் அறிவேன்.எவ்வாறாயினும் நபிமொழிகளுக்கு மதிப்பளியுங்கள், அவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சார்ந்திருப்பதால் அவற்றிலிருந்து பயன் பெறுங்கள். திருக்குர்ஆனும் சுன்னத்தும் ஹதீஸுகளை நிராகரிக்காதவரை நீங்களும் அவற்றை நிராகரிக்காதீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸ்களுக்கு நீங்கள் எந்த அளவுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்றால், உங்களிடமிருந்து வெளிப்படும் ஒவ்வோர் அசைவு மற்றும் அமைதி, செயல் மற்றும் செயலின்மை அனைத்திற்கும் சாதகமாக உங்களிடம் ஏதாவதொரு ஹதீஸ் இருக்க வேண்டும்.'' (கிஷ்தி நூஹ்- ரூஹானி கஸாயின், பாகம் 19 பக்கம் 61-63)

அன்னார் மற்றுமோர் இடத்தில் கூறுகிறார்கள்:

"குர்ஆன் மற்றும் சுன்னத்தை எதிர்க்காத,அவற்றிற்கு இணக்கமான ஒரு நபிமொழி அது எவ்வளவு பலவீனமாக இருந்தாலும் சரி அதன்படி செயல்படுவதும் மனிதரால் உருவாக்கப்பட்ட ஃபிக்கா (மார்க்கச் சட்டம்) மீது அதற்கு முக்கியத்துவம் வழங்குவதும் நமது ஜமாஅத்தின் கடமையாகும்.....நடுநிலையை உங்கள் மார்க்கமாக கருதுங்கள். அதாவது, திருக்குர்ஆன் கைவிடப்பட்ட ஒன்றாக ஆகிவிடுமளவுக்கு முற்றிலும் ஹதீஸ்களை உங்கள் கிப்லாவாகவும் கஅபாவாகவும் ஆக்கிக் கொள்ளாதீர்கள். நபியின் ஹதீஸ்கள் முற்றிலும் வீணாகிவிடும் அளவுக்கு அந்த ஹதீஸ்களை வீணானவையாகவும் பொருளற்றவையாகவும் ஆக்கி விடாதீர்கள்.'' (ரூஹானி கஸாயின், பாகம் 19 பக்கம் 212, 213)

**ஆட்சேபணை எண் :** 10

“நான் அல்லாஹ்வின் வல்லமையின் உருவமாக இருக்கிறேன். வெற்றி என்னுடைய பாதையில் தான் வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே என்னை அறியாதவன் விரட்டப்பட்ட காஃபிராவான். அவனின் அமல்கள் ஏற்கப்படாது.அவன் உலகில் வேதனைக்கும் மறுமையில் சாபத்திற்கும் உள்ளாவான்.” (ஆதாரம்: ரூஹானீ ஹஜாயின் பாகம் 22, பக்கம் 390)

**பதில் :** ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையின் முல்லாக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதியதாகக் கூறி ஆட்சேபணை செய்து இதற்கு பதிலளித்தால் ஒரு கோடி ரூபாய் பரிசு எனக் கூறுகின்ற இந்த மேற்கோள் உண்மையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதியதல்ல. மாறாக சிராகுத்தீன் ஜம்மூனி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முபாஹிலாவிற்கென விடுத்த அழைப்பின் ஒரு பகுதியாகும். இந்த உண்மையின் விரிவான விளக்கம் என்னவென்றால், இது சிராகுத்தீன் ஜம்மூனி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயரில் எழுதிய வாக்கியமாகும். மேலும் அன்னாரை தஜ்ஜால் எனவும் எழுதியுள்ளான். மேலும் இந்த தஜ்ஜாலை அழிப்பதற்காக இறைவன் என்னை அனுப்பியுள்ளான் எனக் கூறியுள்ளான். மேலும் ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள தஜ்ஜால் நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தான் என எழுதியுள்ளான். மேலும் அன்னாரை ஒரு குழப்பம் எனக் கூறி முபாஹிலாவிற்காக அழைத்து, இறைவா! நீ இந்த குழப்பத்தை உலகிலிருந்து தூக்கிவிடு என பிரார்த்தனை செய்தான். இவ்வாறு எழுதி சிராகுத்தீன் ஜம்மூனி இறைவனிடமிருந்து தீர்ப்பை வேண்டினான். இறைவனுடைய தீர்ப்பு வெளிப்பட்டது. அதன்படி சிராகுத்தீன் ஜம்மூனி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய காலத்திலேயே 14 ஏப்ரல் 1906 ஆம் ஆண்டு தன்னுடைய இரு மகன்களுடன் பிளேக் நோயால் தாக்கப்பட்டு அழிந்து போனான்.

எனவே ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையின் மவ்லவிமார்களும் இறைவனுக்கு அஞ்ச வேண்டும். மேலும் ஒரு உண்மையாளரை நிராகரிப்பதிலிருந்தும் அவரை





இழிவுப்படுத்துவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

**ஆட்சேபணை எண் :** 11-15

11. இந்த ஆங்கிலேய ஆட்சியின் கீழ் கிடைக்கும் நிம்மதி மக்கா மதினாவில் கூட கிடைக்காது. (ஆதாரம்: ரூஹானீ ஹஜாயின் பாகம் 15, பக்கம் 156)

12. சில மடையர்கள் இந்த (ஆங்கிலேய) அரசாங்கத்துடன் ஜிஹாத் செய்வது சரியா? தவறா? என்று கேட்கிறார்கள். இந்த கேள்வியே மடத்தனமானது. ஏனெனில் யாருடைய உபகாரங்களுக்கு நன்றி செலுத்துவது ஃபர்ளாகிவிட்டதோ அப்படிப்பட்டவர்களுடன் எப்படி ஜிஹாத் செய்ய முடியும். உபகாரம் செய்பவர்களுக்கு துரோகம் செய்வது விபச்சாரனின் செயலாகும். (ஆதாரம்: ரூஹானீ ஹஜாயின் பாகம்-6, பக்கம் 380)

13. எனது வழிமுறையாக இருக்கிறது.நான் திரும்ப திரும்ப கூறுகிறேன். இஸ்லாத்தில் இரண்டு பக்கங்கள் உள்ளது. ஒன்று இறைவனுக்கு வழிபடுவது. இரண்டாவது அநியாயக்காரர்களிடமிருந்து அபயமளித்த இந்த ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு வழிபடுவது. (ஆதாரம்: ரூஹானீ ஹஜாயின் பாகம் 6, பக்கம்- 380)

14. இது போன்ற ஆங்கிலேய அரசாங்கத்தின் நிழலில் நம்மை வைத்த அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும். (ஆதாரம்: ரூஹானீ ஹஜாயின் பாகம் 13, பக்கம்-18)

15. என்னிடம் ஒப்பந்தம் செய்து என்னை மஸீஹ் என்று ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் ஜிஹாத் செய்வது ஹராமாகும். (ஆதாரம்: ஜரூஹானீ ஹஜாயின் பாகம் 17, பக்கம்-28)

**பதில் :** 11 முதல் 15 வரையுள்ள ஆட்சேபணைகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் ஆங்கிலேய ஆட்சியைப் புகழ்ந்துள்ளதை மையப்படுத்தியதாகும். இதற்கான காரணம், ஆங்கிலேய அரசு மார்க்க விஷயத்தில் சுதந்திரம் வழங்கியிருந்தது. எனவேதான் அதற்கு கட்டுப்படுமாறு

அறிவுறுத்தினார்கள். ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு வழிபடுவது என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதியிருப்பதாக எதிரிகள் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளனர். வழிபடுமாறு ஒருபோதும் கூறவில்லை; கட்டுப்படுமாறுதான் கூறினார்கள். எதிரிகள் இங்கேயும் தமது கைவரிசையைக் காட்டியிருக்கிறார்கள்.ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எதிரிகள் அந்த நேரத்தில் ஆங்கிலேய அரசை தூண்டி அன்னாருக்கு எதிராக தப்பெண்ணத்தை உண்டு பண்ணினர். மிர்ஸா குலாம் அஹ்மது மஹ்தி என வாதித்து விட்டார். மேலும் மஹ்தி கொலை வெறித் தாக்குதல் நடத்தி கிறித்தவர்களின் ஆட்சி அரியணையை தலைகீழாக்கி விடுவார் எனும் விஷயம் முஸ்லிம்களிடையே பிரபலமாக இருப்பதால் அரசு இவரை கண்காணிக்க வேண்டும் என எச்சரித்தனர். இந்த தப்பெண்ணம் மற்றும் பொய் புகாருக்கு மறுப்புரையாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் தாம் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யக் கூடியவன் அல்லன். எந்த இரத்தவெறிப் பிடித்த மஹ்தியின் வருகைக்கான கொள்கையுடையவனுமல்லன் என்பதை விளக்கினார்கள். மேலும் எல்லா வகையிலும் அமைதியை நிலைநாட்டியிருக்கும் இந்த அரசை நான் ஏன் எதிர்க்க வேண்டும்? இந்த அமைதி மக்கா மதீனாவில் கூட இல்லை. ஏனென்றால் இன்று கூட சவூதி அரேபியாவில் வஹாபி பிரிவைத் தவிர வேறு எந்த முஸ்லிம் பிரிவும் தமது கோட்பாடுகளை பரப்ப முடியாது. ஆனால் இந்தியாவில் எந்த கொள்கை கோட்பாடு கொண்ட மார்க்கத்தவரும் தமது மார்க்கத்தைப் பரப்பும் வசதி உள்ளது. இந்த மார்க்க சுதந்திரம் அந்த நேரத்தில் ஆங்கிலேய ஆட்சியிடம் இருந்தது. ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் அதே ஆங்கிலேய அரசு கடவுளாகக் கருதும் இயேசு மரணித்துவிட்டார் என்ற அறிவிப்பை மிகுந்த சுதந்திரத்தோடு தீவிரமாக தமது பிரசாரம் மூலம் வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். இதைப் பற்றித்தான் அன்னார் கூறுகிறார்கள்: “இந்த ஆட்சியின் நிழலாக நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கும் இந்த அமைதி (மார்க்க சுதந்திரம்) மக்காவிலோ மதீனாவிலோ கூட கிடைக்க முடியாது எனக் குறிப்பிட்டார்கள். இப்போது இதன் முழு வாக்கியத்தையும் பாருங்கள். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:





“முஸ்லிம்களின் சந்ததிகளே! பல விதமான திட்டம் தீட்டி என்னை இழிவுபடுத்தத் துடிக்கும் அளவிற்கு நான் உங்களுக்கு என்ன பாவம் செய்தேன்? உங்களது மவ்லவிகள், இவர் காஃபிர்,மார்க்கமற்றவர், தஜ்ஜால், ஆங்கிலேய ஆட்சியை எல்லை மீறி புகழ்கிறார், ரோமானிய ஆட்சியை எதிர்க்கிறார் என்றெல்லாம் எந்த நேரமும் பேசி வருகிறார்கள். உங்களில் அதிகார வர்க்கத்தில் உள்ளவர்கள் இந்த நன்றியுள்ள அரசின் கிளர்ச்சியாளராக என்னை சித்தரிக்க முயல்கிறார்கள். எப்போதும் உண்மைக்கு மாற்றமான தகவலை என் தொடர்பாக எட்ட வைக்க எல்லா பக்கங்களிலிருந்தும் முயற்சி செய்யப்படுகிறது. நான் கிளர்ச்சிகளில் ஈடுபடும் மனிதனல்லன் என்பது உங்களுக்கு மிக நன்றாகவே தெரியும்....”

“முஸ்லிம்கள் இந்த அரசின் உண்மையான நலம் விரும்பிகளாக வேண்டும் என்பதிலும் இரத்த வெறிப்பிடித்த மஹ்தி மஸீஹ் பற்றிய அடிப்படையற்ற அறிவிப்புகள், முட்டாள்களது உள்ளத்தை நாசமாக்குகின்ற ஜிஹாது பற்றிய பிரச்சனைகளை அவர்களின் உள்ளத்திலிருந்து அகற்ற வேண்டும் என்பதிலும் எப்போதும் எனது முயற்சி இருந்துள்ளது. அப்படியிருக்க நான் இந்த அரசிற்கு கேடு விளைவிப்பவனாகி ஏதேனும் கிளர்ச்சிக்கான தீய திட்டங்களை எனது ஜமாஅத்தில் பரப்புவது எவ்வாறு சாத்தியமாகும்? ஆங்கிலேய அரசிற்கு கட்டுப்படும் இந்த போதனையைத் தான் இருபது ஆண்டு காலமாக நான் வழங்கி வருகிறேன்.என்னைப் பின்பற்றுபவர்களுக்கு இந்த வழிகாட்டலையே வழங்கி வருகிறேன். அப்படியிருக்க இந்த அனைத்து போதனைகளுக்கும் எதிராக ஏதேனும் கிளர்ச்சிக்கான திட்டத்தின் போதனையை நான் வழங்குவது எவ்வாறு சாத்தியம்?

இறைவன் தனது பிரத்தியேக அருள் மூலமாக எனது மற்றும் எனது ஜமாஅத்தின் அடைக்கலமாக இந்த ஆட்சியை ஆக்கியுள்ளான். இந்த ஆட்சியின் நிழலில் கிடைத்துக் கொண்டிருக்கும் இந்த அமைதி மகத்துவமிக்க மக்காவிலும் மதீனாவிலும் கிடைக்காது. ரோமானிய தலைநகரமாகிய கஸ்தன்தனியாவிலும் இல்லை. பின்பு நானே எனது நிம்மதியின் எதிரியாவேனா? இந்த ஆட்சிக்கெதிராக நான் ஏதேனும் கிளர்ச்சியான திட்டத்தை மனதில் ஒளித்து வைத்திருந்தால், முஸ்லிம்களில் எவரேனும் ஜிஹாது, கிளர்ச்சிக்கான கெட்ட எண்ணத்தை ஒளித்து வைத்திருந்தால் நான் அவ்வாறானவர்களை மிகுந்த முட்டாளாகவும்,

அநீதியிழைக்கும் பாக்கியம் கெட்ட கொடியவர்களாகவுமே கருதுகிறேன். ஏனென்றால் இஸ்லாத்தின் மறுவாழ்வு ஆங்கிலேய ஆட்சியின் அமைதி தரக்கூடிய நிழலின் மூலமாகத்தான் பிறந்துள்ளது என்பதற்கு நாங்கள் சாட்சியாவோம். நீங்கள் என்னை மனதில் தூற்றினாலும் சரி, ஏசிப் பேசினாலும் சரி அல்லது முன்பைப் போல் காஃபிர் என ஃபத்வா எழுதினாலும் சரி. இவ்வாறான ஆட்சிக்கெதிராக மனதில் கிளர்ச்சியான எண்ணங்கள் கொள்வது அல்லது கிளர்ச்சி எழும் வகையிலான எண்ணங்களைக் கொண்டிருப்பது தீய நடத்தையும், இறைவன் பார்வையில் பாவமுமாகும் என்பதே எனது கோட்பாடாகும். மிகுதியான முஸ்லிம்கள் இரத்த வெறிப்பிடித்த மஹ்தி, மஸீஹ் தொடர்பான ஹதீஸ்கள் கட்டுக்கதையாகும் என்று நம்பாதவரை அவர்களது உள்ளம் ஒருபோதும் தூய்மையடையாது.” (தர்யாகுல் குலூப்-ரூஹானி கஸாயின், பாகம் 15, பக்கம் 155, 156)

உண்மை என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைத்தது உலக மார்க்கங்களுக்கு விடுத்த அழைப்பு வானின் ஒரு ஓசையாகவும் இஸ்ராஃபீலின் எக்காளமாகவும் இருந்தது. அது ஒரு பக்கம் முஸ்லிம்களின் உயிரற்ற உடலிற்கு ஒரு வலுவான ஆன்மாவை வழங்கியது. மறுபக்கம் சிலுவைப் படையோ நிராயுதபாணியாக சிதைந்து போயிருந்தன.அவர்களது பாதம் நழுவி முன்னேற்றத்தின் வேகத்தில் தடை ஏற்பட்டது. இஸ்லாத்தை அழிப்பதற்காக தீட்டப்பட்ட திட்டங்கள் காற்றில் கரைந்துவிட்டது. இஸ்லாத்தின் பொங்கிவரும் புதிய ஆற்றலும் சக்தியும் சிலுவை மதம் ஆபத்தில் உள்ளதை அவர்களுக்கு உணர்த்தியது. 1894 ஆம் ஆண்டில் இலண்டனில் நடைபெற்ற பாதிரிமார்களின் உலக மாநாட்டில் லாட் பிஷப் ஆஃப் கிளோஸிஸ்டர் (Lord Bishop of Cloucester, the Right Reverend Charles John Ellicot ) எனும் பாதிரியார் மிகுந்த கவலையுடனும் வருத்தத்துடனும் முழு கிறித்தவ உலகிற்கும் இவ்வாறு அறிக்கை விடுத்தார்:

“I learn from those who are experienced in these things that there is now a new kind of Mohammadanism showing itself in many part of our empire in India, and even in our island here at home, Mohammadanism speaks





with reverence of our blessed Lord and Master, but is not the less more intensely monotheistic than ever. It discards many of these usages which have made Mohammadanism hateful in our eyes, but the False prophet holds his place no less pre-eminently than before. Changes are plainly to be recognized; but Mohammadanism is not the less aggressive. and alas! to some minds among us (God grant that they be not many) even additionally attractive.”

(THE OFFICIAL REPORT OF THE MISSIONARY CONFERENCE OF THE ANGLICAN COMMUNION, 1984, PAGE:64)

அதாவது “இஸ்லாத்தின் ஒரு புதிய பரிமாணம் இப்போது வெளிப்பட்டுள்ளது. எனக்கு சில அனுபவசாலிகள் கூறிய கூற்றிலிருந்து, இந்தியாவின் பிரிட்டிஷ் ஆட்சியில் ஒரு புது வகையான இஸ்லாம் நமக்கு முன் வந்து கொண்டிருக்கின்றது...... இந்த புதிய இஸ்லாத்தின் காரணமாக முஹம்மதிற்கு (ஸல்) முந்தைய அதே மகத்துவம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்த புதிய மாற்றத்தை மிக எளிதாக அடையாளம் காண முடியும். அது மட்டுமின்றி இந்த புதிய இஸ்லாம் தன்னைப் பொருத்தவரை தற்காப்பு நடவடிக்கை மட்டும் எடுப்பதில்லை. மாறாக தாக்குதல்களையும் கைக்கொள்கின்றது. நம்மில் சிலரது உள்ளமும் அதன் பக்கம் ஈர்க்கப்பட்டு வருவது கவலைக்குரிய விஷயமாகும்.”

இங்கிலாந்தின் பாதிரிகள் கூறுவதைப் பாருங்கள்! மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் செயல்களால் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மறைந்த அதே மகத்துவம் மீண்டும் கிடைத்துள்ளது என்று கூறுகிறார்களா?அல்லது இஸ்லாம் அழிவை சந்தித்தது என்று கூறுகிறார்களா? என்பதை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக கிறித்துவத்தின் மீது இஸ்லாத்திற்கு கிடைத்த இந்த வெளிப்படையான வெற்றி பற்றி இந்த பாதிரியார்கள் மட்டும் ஆமோதிக்கவில்லை. மாறாக துணைக் கண்டமான இந்தியா, பாகிஸ்தானின் ஒரு பிரபலமான ஆலிம் மவ்லானா நூர் முஹம்மது நக்ஷபந்தி தில்லி ஸாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக கிறித்துவத்திற்கு எதிரான பலப்பரீட்சையில் இஸ்லாத்திற்கு கிடைத்த இந்த மகத்தான வெற்றியைப் பற்றி ஆரவாரமிக்க சொற்களால் இவ்வாறு கூறுகிறார்:

"....... இதே காலகட்டத்தில் பாதிரியார் லேஃப் ராய், பாதிரியார்களின் ஒரு மிகப் பெரிய கூட்டத்துடன், சிறிது காலத்திற்குள் முழு இந்தியாவையும் கிறித்துவ மதமாக்கிவிடுவேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டு தலைமையகத்திலிருந்து புறப்பட்டார். ஆங்கிலேயர்களின் தலைமையகத்திலிருந்து பெரும் பெரும் பண உதவி மற்றும் பிற்காலத்தில் செய்யப்படும் தொடர் உதவிகளின் வாக்குறுதிகளோடு இந்தியாவில் நுழைந்து பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தினார் .......ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பூத உடலுடன் வானில் உயிரோடு இருப்பது, மற்ற நபிமார்கள் பூமியில் அடக்கம் செய்யப்பட்டிருப்பது போன்ற தாக்குதல்கள் பாமர மக்களிடம் வேலை செய்தது. **அப்போது மவ்லவி குலாம் அஹ்மது காதியானி எழுந்து நின்று பாதிரிகளின் கூட்டத்தை நோக்கி, எந்த ஈஸாவைப் பற்றி நீங்கள் கூறுகிறீர்களோ அவர் மற்ற மனிதர்களைப் போல் மரணித்து அடக்கம் செய்யப்பட்டு விட்டார். எந்த ஈஸா வருவதைப் பற்றி கூறப்பட்டுள்ளதோ அது நான்தான் . எனவே நீங்கள் நற்பேறு பெற்றவர்களாயின் என்னை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்.** இந்த முறையால் அவர் லேஃப்ராயை எந்த அளவுக்கு திணறடித்தார் என்றால் இதிலிருந்து தப்பித்து வெளியே வருவது கஷ்டமாகி விட்டது. **இந்த முறையால் அவர் இந்தியா முதல் தலைமையகம் வரையுள்ள பாதிரிகளை தோற்கடித்து விட்டார்."** (திபாச்சா குர்ஆன், பக்கம் 130- ஹாபிஸ் நூர் முஹம்மது நக்ஷபந்தி சிஷ்தி- தில்லி)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முழு வாழ்க்கையும் கிறித்துவத்திற்கு போட்டியாக இஸ்லாத்தை பாதுகாப்பதில் தான் கழிந்தது. இந்த குறிக்கோளுக்காகவே அன்னார் முழு வாழ்நாளும் போராடினார்கள். அன்னாரின் போராட்டத்தை அன்னாரை ஏற்காதவர்கள் கூட ஆமோதித்து மாபெரும் சாதனையாக முன் வைத்துள்ளனர். இறைநியதி அவர்களின் ஆரவாரமிக்க சொற்களை இனி வருபவர்களின் நேர்வழிக்கான காரணியாக பாதுகாத்து வைத்துள்ளது.

தில்லியிலிருந்து வெளிவரும் கர்ஸன் கஜட் பத்திரிகை ஆசிரியர், மிர்ஸா ஹைரத் தெஹல்வி ஸாஹிப் எழுதுகிறார்:

"மறைந்த அன்னாரால் ஆரிய மற்றும் கிறித்துவர்களுக்கு எதிராக இஸ்லாத்திற்கு ஆற்றப்பட்ட சேவைகள் உண்மையிலேயே மிகுந்த





பாராட்டுதலுக்கு உரியவை.அவர் முனாஸிராவின் (விவாதத்தின்) நிலையையே மாற்றிவிட்டார். இந்தியாவில் ஒரு புதிய பிரசார முறையையே உருவாக்கிவிட்டார். நாம் ஒரு முஸ்லிம் என்ற நிலையில் மட்டுமின்றி ஒரு ஆராய்ச்சியாளர் என்ற நிலையிலும், **பெரும் பெரிய ஆரியர்கள் மற்றும் பாதிரிகளுக்கு கூட மறைந்த அன்னாருக்கு எதிராக வாய் திறக்க துணிவில்லை** என்பதை ஏற்றுக் கொள்கிறோம்."

ஸியாஸத் பத்திரிகை ஆசிரியர் மவ்லானா சையது ஹபீப் ஸாஹிப் இவ்வாறு எழுதுகிறார்:

"அந்த நேரத்தில் ஆரிய மற்றும் கிறித்துவ பிரசாரகர்கள் இஸ்லாம் மீது பாதுகாப்பில்லாத தாக்குதல்களைத் தொடுத்துக் கொண்டிருந்தார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த மார்க்கத்தார் உண்மையான ஷரீஅத்தை பாதுகாப்பதில் தீவிரமாக இருந்தார்கள். இருந்தாலும் அதில் பெரிய முன்னேற்றம் ஒன்றும் ஏற்படவில்லை. அந்நேரம் **மிர்ஸா குலாம் அஹ்மது ஸாஹிப் களத்தில் இறங்கி கிறித்துவ பாதிரியார்கள் மற்றும் ஆரிய பண்டிதர்களுக்கு எதிராக இஸ்லாம் சார்பாக நெஞ்சை நிமிர்த்தியவாறு தொடர்ந்து போராடினார்**........மிர்ஸா ஸாஹிப் எதிரிகளின் பல் நொறுங்கிவிடும் அளவிற்கு இந்த கடமையை சீரும் சிறப்புமாக நிறைவேற்றினார் என்று கூறுவதில் எனக்கு எவ்வித தயக்கமுமில்லை." (தஹ்ரீகே காதியான் பக்கம் 208)

இந்தியாவின் இமாம் என்றழைக்கப்பட்ட மவ்லானா அபுல் கலாம் ஆஸாத் அன்னாரைப் பற்றி கூறுகின்றார்:

**"அந்த மனிதர் மிகப் பெரும் மனிதராவார்.** அவரது பேனா மந்திரக்கோலாக இருந்தது.நாவிலும் மந்திரம் இருந்தது. மூளையால் நிகழ்கின்ற வியக்கத்தக்க அற்புதங்களின் வடிவமாக அவர் திகழ்ந்தார். அவரது பார்வை மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதாகவும், குரல் அனைவரையும் ஒன்று திரட்டக்கூடியதாகவும் இருந்தது. அவரது விரல்களில் புரட்சியின் கம்பிகள் பின்னிப் பிணைந்திருந்தன. மேலும் அவரது இரு மணிக்கட்டுகளும் இரண்டு மின்சார சங்கிலிகளாக இருந்தன. **அந்த மனிதர் மார்க்க உலகில் முப்பது வருடங்கள் வரை பூகம்பமாகவும் புயலாகவும் இருந்தார்.** அவர் மறுமை நாளின் எக்காளமாக மாறி கனவுலகில் உறங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு விழிப்பூட்டி கொண்டேயிருந்தார். ... **மிர்ஸா குலாம் அஹ்மது ஸாஹிப்**

**காதியானி அவர்களின் மரணம் நாம் படிப்பினை பெறாமல் இருக்கக்கூடிய ஒன்றல்ல.** அந்த இழப்பை அழித்துவிடுவதற்காக அதனை ஓடிக் கொண்டிருக்கும் காலத்தின் கரங்களில் ஒப்படைத்துவிட்டு நாம் பொறுமையுடன் இருக்க முடியாது. **மார்க்க உலகில் அல்லது அறிவுலகில் புரட்சியை எற்படுத்தக் கூடிய இத்தகைய மனிதர்கள் எப்போதும் உலகில் வர மாட்டார்கள்.** வரலாற்று ஏடுகளில் இடம் பெறும் இத்தகையோர் மிகவும் குறைவாகத்தான் உலகில் புரட்சியை உருவாக்கி காட்டிவிட்டு செல்கின்றார்கள்.'' (அமிர்தசரஸிலிருந்து வெளியான வக்கீல் பத்திரிகையில் வந்த செய்தி. இந்த மேற்கோள் தாரீகே அஹ்மதிய்யத் பாகம் 2 பக்கம் 560 லிருந்து எடுக்கப்பட்டது.)

ஜிஹாதின் தடையைப் பொருத்தவரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒருபோதும் உண்மையான இஸ்லாத்தின் ஜிஹாதை தடை செய்யவில்லை என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அன்னார் மவ்லவிகளின் மூளையில் உதித்த தவறாக சித்தரிக்கப்பட்ட ஜிஹாதையே தடை செய்தார்கள். காரணம் அன்னாரது காலத்தில் பாதிரியார்களும் இஸ்லாத்திலிருந்து வெளியேறியவர்களும் இஸ்லாம் வாளாலான ஜிஹாதினை ஊக்குவிக்கின்றது என்று கூறிவிட்டு மறுபுறம் முஸ்லிம்களை அழிக்குமாறு ஆங்கிலேய அரசை தூண்டிவிட்டு இஸ்லாத்தின் மீது பெரும் தாக்குதல்கள் தொடுத்து வந்தனர். இந்த காலகட்டத்தில் கிறித்துவ பாதிரியார்கள் முஸ்லிம்களுடைய ஜிஹாதின் பெயரால் ஆங்கிலேயர்களை மீண்டும் மீண்டும் தூண்டி இதை காரணமாக வைத்து முஸ்லிம்களை நசுக்க பலமிக்க ஹிந்துக்களுக்கு ஆதரவாக செயல்படலாம் என திட்டமிட்டார்கள். இவ்வாறு முஸ்லிமிலிருந்து கிறித்துவராக மாறிய ஒரு பாதிரியார் இமாதுத்தீன் என்பவரைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''அந்த குறைகூறும் மனிதர் இஸ்லாத்தின் ஜிஹாதைப் பற்றி கூறும்போது, குர்ஆன் எவ்வித காரணமும் நிபந்தனையுமின்றி ஜிஹாதை ஊக்குவிப்பதாக யூகத்தை வெளிப்படுத்தியுள்ளார். இதைவிட பெரிய பொய்யோ இட்டுக்கட்டோ வேறு எதுவும் இருக்க முடியாது. திருக்குர்ஆன் வெறுமனே சண்டையிட அனுமதியளிப்பதில்லை. மாறாக இறையடியார்களை அவன்மீது நம்பிக்கை





கொள்வதிலிருந்து தடுப்பவர்கள், அவனது மார்க்கத்தில் நுழைய விடாமல் தடுப்பவர்கள், இறைவனுடைய கட்டளையை பின்பற்றி நடப்பதை தடுப்பவர்கள், இறைவனை வணங்க தடை செய்பவர்கள் ஆகியோரோடு மட்டுமே சண்டையிடுமாறு கட்டளையிடு கிறது.மேலும் முஸ்லிம்களிடம் காரணமின்றி சண்டையிடுபவர்கள், முஃமின்களை அவர்களின் வீடுகளிலிருந்தும் நாட்டிலிருந்தும் வெளியேற்றுபவர்கள், அல்லாஹ்வின் அடியார்களை வலுக்கட்டாயமாக தமது மார்க்கத்தில் நுழைப்பவர்கள், இஸ்லாம் மார்க்கத்தை அழிக்க நாடுபவர்கள் மற்றும் மக்களை முஸ்லிமாகுவதிலிருந்து தடுப்பவர்கள் ஆகியோர் மீதே இறைவனது கோபம் இறங்குகிறது. அவர்கள் விலகவில்லையென்றால் அவர்களுடன் சண்டையிடுவது முஃமின்கள் மீது கடமையாகும்.'' (ரூஹானி கஸாயின் பாகம் 8 பக்கம் 62)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்:

''அறியாமையில் இருப்பவர்களே கேளுங்கள்! நான் இந்த அரசாங்கத்தை மகிழ்விப்பதற்காகக் கூறவில்லை. மாறாக உண்மை என்னவென்றால், இஸ்லாமிய மார்க்கம் மற்றும் இம்மார்க்கத்தின் சம்பிரதாயங்களை நிறைவேற்றுவதில் இடையூறு விளைவிக்காத, தன்னுடைய மார்க்கத்தின் முன்னேற்றத்திற்காக நம் மீது வாளை வீசாத இந்த அரசாங்கத்துடன் மார்க்கப் போர் செய்வது திருக்குர்ஆனின் அடிப்படையில் ஹராமாகும். ஏனென்றால் அதுவும் எந்தவொரு மார்க்கப் போரும் செய்யவில்லை.'' (ரூஹானி கஸாயின் பாகம் 17, பக்கம் 76)

இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நிலைபாடாகும். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆங்கிலேயர்களை புகழ்ந்திருப்பதிலிருந்து அவர்கள் ஆங்கிலேயர்களின் ஏஜென்ட் என்பது நிரூபணமாகிவிட்டது என்று ஆட்சேபணை செய்கின்றனர். இப்போது அஹ்லே ஹதீஸ் மற்றும் தேவ்பந்தி பிரிவின் சிகரமாக விளங்கும் ஷம்ஷுல் உலமா மவ்லானா நதீர் அஹ்மது தெஹ்லவி கூறுவதைக் கேளுங்கள். அவர் கூறுகிறார்:

'' இந்தும் அல்லாத முஸ்லிமுமல்லாத ஓர் அந்நிய அதிகாரி ஒருவர் அவர் ஐரோப்பிய அரசர்களில் ஒருவராக இருந்தாலும் சரி- அவர் ஆட்சி செய்வதில்தான் முழு இந்தியாவின் நலனும்

அடங்கியுள்ளது. (ஆங்கிலேயர் தான் இருக்க வேண்டும் என்றில்லை. விருப்பமுள்ள எந்த ஐரோப்பியராக இருந்தாலும் சரி). மேலும் ஆங்கிலேய அரசர் வந்தது இறைவனது எல்லையற்ற அருளாகும்.'' (மஜ்முஆ லெக்சர் மவ்லானா நதீர் அஹ்மது தெஹ்லவி பக்கம் 4,5 வெளியீட்டு ஆண்டு 1890)

தொடர்ந்து அவர் கூறுகிறார்:

"(ஆங்கிலேய அரசாங்கமாகிய ) இது கொடுமையிழைக்கும் அரசாங்கமா என்ன? தவ்பா, தவ்பா. இது தாய்,தந்தையை விட அதிகமாக பரிவு காட்டக்கூடியதாகும்.'' (மஜ்முஆ லெக்சர்...)

வரலாறு எவ்வாறு ஆதாரங்களை அடுக்கடுக்காக வழங்குகிறது என்பதைப் பாருங்கள்! தேவ்பந்தி பிரிவின் மார்க்கக் கல்விக் கூடமான நத்வதுல் உலமாவின் அடிக்கல்லை ஆங்கிலேயர்கள் தான் நாட்டியுள்ளனர். அவர்கள் சார்பாக வெளிவரும் அந்நத்வா இதழ் இவ்வாறு வரலாற்று சாட்சியை பதிவு செய்துள்ளது:

"1908 நவம்பர் 28 ஆம் தேதி தாருல் உலூம் நத்வத்துல் உலமாவின் அடிக்கல்லை ஐ. நா. கவர்னர் His Honourable லெப்டினன்ட் ஸர் ஜான் ஸ்காட் ஹியோஸ் K.C.I.E. என்பவர் நாட்டினார்.'' (அந்நத்வா- டிசம்பர் 1908 பக்கம் 4)

அதே பக்கத்தில் அடுத்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

"இந்த புகழ்பெற்ற மார்க்கக் கல்விக் கூடம் ஒரு ஆங்கிலேயரின் அருட்கொடையாகும்.''

இதுமட்டுமல்ல. இது உருவாக்கப்பட்டதன் காரணம் மற்றும் குறிக்கோளை விளக்கியவாறும் இதன் ஆலிம்களின் கடமைகளையும் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது:

"இந்த அரசினுடைய ஆட்சியின் அருள்களை அறிந்து கொண்டு நாட்டில் அரசிற்கு நன்றியுணர்வுடன் இருக்கும் எண்ணங்களை பரப்ப வேண்டியதும் ஆலிம்களின் ஒரு முக்கிய கடமையாகும்.'' (அந்நத்வா, ஜூலை 1908)

இந்த நத்வா மத்ரஸாவை வேண்டுமானால் ஆங்கிலேயர்களால் நடப்பட்ட செடி என்று கூறலாம். இதை நட்டியதும் ஆங்கிலேயர்கள். நீர்ப் பாய்ச்சியதும் ஆங்கிலேயர்கள் தான்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஆங்கிலேயர்களால் நியமிக்கப்பட்டவர் என்பது அப்பட்டமான பொய்யாகும். அவர்கள் இறைவனால் அனுப்பப்பட்ட உண்மையான மஸீஹ், மஹ்தி ஆவார்கள். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது





(அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து நியமிக்கப்படாத வராகவும், இட்டுக்கட்டியும் வாதம் புரிந்திருந்தால் திருக்குர்ஆனின் சட்டத்திற்கேற்ப தடுக்கப்பட்டு, அழிக்கப்பட்டிருப்பார்கள். திருக்குர்ஆன் கூறுகிறது:

"அவர் எந்த சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால், நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பின்னர் நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப் பெரு நரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம்.'' ( 69 : 45-48)

ஆனால் அன்னாரது விஷயத்தில் இது நேர்மாறாக உள்ளது. எனவேதான் அன்னார் கவிதையில் இவ்வாறு கூறுகிறார்கள்:

இறைவன் ஒரு பொய்யனோடு இவ்விதமாக பரிமாறுவானா?

அல்லது இவரை புரிந்து கொள்வதில் அவனுக்கு தவறு ஏற்பட்டுவிட்டதா?

தீயவரை ஒருவரும் நேசிக்க மாட்டார்கள்.
அப்படியென்றால் அவன் நேசனாகிவிடும் அளவிற்கு
ஏதோ ஒன்று உள்ளது.
வாதிகளே! இறைவன் உங்களோடு இல்லை.
இந்த குஃப்ர் உங்களது மார்க்கத்தை விட
ஆயிரம் மடங்கு மேலானது.

ஒரு நபியின் உண்மைத்துவத்திற்கான அளவுகோலாக திருக்குர்ஆன் முன் வைப்பவை அனைத்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முற்றிலும் பொருந்துபவையாக உள்ளன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் பிற நபிமார்களின் உண்மைத்துவத்தை எந்த அளவுகோல்கள் நிரூபிக்கின்றனவோ அதே அளவுகோல்கள்தான் அன்னாரது உண்மையை நிரூபிக்கின்றன. நபித்துவத்தை உறுதிப்படுத்தக்கூடிய திருக்குர்ஆனின் அனைத்து சான்றுகளும் முழுமையாக அன்னார் மீது முழுமைப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே ஆட்சேபணை செய்பவர்களே! உங்களுக்கு காலத்தின் மஹ்தி மஸீஹின் மீது ஈமான் கொள்ளும் நற்பேறு கிடைக்கவில்லை யென்றால், அது உங்களுக்கு எவ்வித பெருமைக்கும் உரிய ஒன்றல்ல. இது உங்களது துர்பாக்கியமேயாகும். இந்த துர்பாக்கியத்தில் உங்களுக்கு நிம்மதி உள்ளது என்றால் அது உங்கள் கொடுப்பினை! நீங்களும் இறுதியில் நஷ்டமடைந்தவர்களாகவும் இழப்பிற்குரியவர்களாகவுமே உங்களைக் காண்பீர்கள்.

அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாத்தை ஒவ்வொரு நாளும் மலர்ந்து கனிகளாவதை காண்பீர்கள். இன்ஷாஅல்லாஹ்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையை 120 ஆண்டு காலமாக நிரூபிக்கும் இந்த முரசின் ஓசையை கவனமாகக் கேளுங்கள். இறைவன் புறமிருந்து தோன்றும் காலத்தின் இமாமின் கூற்று இறுதி நாள்வரை மேலும் அதிக மகத்துவத்துடன் நிறைவேறிக் கொண்டே செல்லும். அன்னார் கூறுகின்றார்கள்:

“உலகம் என்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஆனால் என்னை அனுப்பியவன் என்னை நன்கறிவான். எனது அழிவை நாடுவது இந்த மக்களின் தவறாகும். முற்றிலும் துர்பாக்கியமாகும். நான் உண்மையான அரசனின் கையால் நடப்பட்ட மரமாவேன்..... மக்களே! என்னுடன் கடைசிவரை விசுவாசத்துடன் இருக்கக்கூடிய கை உள்ளது என்பதை உறுதியாக தெரிந்து கொள்ளுங்கள். உங்களில் ஆண்கள், பெண்கள், வாலிபர்கள், வயோதிகர்கள், பெரியவர்கள், சிறியவர்கள் அனைவரும் ஒன்றாக **எனது அழிவிற்காக ஸஜ்தா செய்து செய்து மூக்கு தேய்ந்து, கை, ஏந்தி ஏந்தி செயலிழந்து போகும் அளவிற்கு துஆ செய்தாலும் அவன் உங்களது துஆக்களை ஒருபோதும் கேட்க மாட்டான்.**மேலும் தன் வேலையை முடிக்காமல் நிற்க மாட்டான். மனிதர்களில் ஒருவர் கூட எனக்கு ஒத்துழைப்பு தராவிட்டாலும் இறைவனின் மலக்குகள் எனக்கு ஒத்துழைப்பு தருவார்கள். நீங்கள் சாட்சிகளை மறைத்தால் மிக விரைவில் கல்கூட எனக்காக சாட்சி கூறும். எனவே உங்கள் ஆன்மா மீது அநீதியிழைக்காதீர்கள். **பொய்யர்களின் முகம் வேறாகவும் உண்மையாளர்களின் முகம் வேறாகவும் இருக்கின்றது.** இறைவன் எந்த விஷயத்தையும் தீர்ப்பளிக்காமல் விட்டுவிட மாட்டான். பொய் மற்றும் இட்டுக்கட்டையும் கொண்ட வாழ்க்கையின் மீதும் பிறருக்காக அஞ்சி இறை கட்டளையை ஏற்க மறுக்கும் நிலையின் மீதும் நான் சாபமிடுகிறேன். எந்த சேவையை குறித்த நேரத்தில் ஆற்றல்மிக்க இறைவன் என்னிடம் ஒப்படைத்து, அதற்காகவே என்னைப் படைத்துள்ளானோ அதில் நான் சோம்பேறித்தனம் காட்டுவது முற்றிலும் சாத்தியமற்ற ஒன்றாகும். சூரியன் ஒருபுறமிருந்தும் பூமி ஒருபுறமிருந்தும் புறப்பட்டு பின்பு ஒன்றாக இணைந்து நசுக்கிவிட விரும்பினாலும் சரியே! மனிதன்





என்பவன் ஒரு புழு, ஒரு சதைப்பிண்டமேயன்றி வேறில்லை. அப்படியிருக்கும்போது ஒரு பூச்சிக்காக, அல்லது ஒரு சதைக்கட்டிக்காக என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியவனின் கட்டளையை எவ்வாறு என்னால் நிராகரிக்க முடியும்? **எவ்வாறு இறைவன் முந்தைய நபிமார்கள் மற்றும் நிராகரிப்பாளர்களிடையே இறுதியில் ஒருநாள் தீர்ப்பு வழங்கினானோ அதே போல் இந்த நேரத்திலும் தீர்ப்பு வழங்குவான்.** இறைவனது தூதர்கள் வருவதற்கும் ஒரு (குறிப்பிட்ட) காலம் உண்டு; செல்வதற்கும் ஒரு காலம் உண்டு. எனவே நான் காலம் தவறி வரவுமில்லை; காலம் தவறி செல்லவும் மாட்டேன் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். இறைவனோடு சண்டையிடாதீர்கள். என்னை அழிப்பது உங்கள் வேலையல்ல.” (ரூஹானி கஸாயின் பாகம் 17 பக்கம் 50)

தொடர்ந்து அவர்கள் கூறுகிறார்கள்:

“நான் மிக உறுதியாகவும் வாதிட்டும் கூறுகிறேன். நான் உண்மையில் இருக்கின்றேன். இறையருளால் இக்களத்தில் வெற்றி எனக்கே. மேலும் எனது தொலைநோக்குப் பார்வையால் முழு உலகையும் எனது உண்மையின் பக்கம் காலெடுத்து வைப்பதை நான் காண்கிறேன். **மிக விரைவில் நான் ஒரு மகத்தான வெற்றியை அடையப் போகிறேன்.** எவ்வாறெனில் **எனது நாவுக்கு ஆதரவாக வேறு ஒரு நாவு பேசுகின்றது, எனது கரத்திற்கு வலு சேர்க்க வேறு ஒரு கரம் செயலாற்றுகிறது.** அதனை உலகம் காண்பதில்லை என்றாலும் நான் காண்கிறேன். எனக்குள் பேசுகின்ற வானுலக ஆன்மா எனது ஒவ்வொரு சொல்லுக்கும் எழுத்துக்கும் வாழ்வளிக்கின்றது. வானில் ஒரு புரட்சியும், கொதிப்பும் தோன்றி அது ஒரு விழிக் கருவைப் போல் இந்த கைப்பிடி மண்ணாகிய என்னை எழுந்து நிற்க வைத்துள்ளது. எவர்மீது தவ்பா (பாவ மன்னிப்பிற்கான) வாசல் அடைக்கப்படவில்லையோ அவர் நான் என் புறமிருந்துள்ளவன் இல்லை என்பதை மிக விரைவில் கண்டு கொள்வார். **உண்மையாளரை அடையாளம் காண முடியாத கண்கள் ஒளியுள்ளவையா என்ன?** எவருக்கு இந்த வான் முழக்கத்தைப் பற்றிய உணர்ச்சி இல்லையோ அவர் உயிருள்ளவரா?” (இஸாலே அல்ஹாம், பக்கம் 303)

நமது கண்ணியமிக்க வாசகர்கள் ஒரு கோடி ரூபாய் பரிசு எனும்

பிரசுரத்தின் உண்மை நிலையையும், வாயடைக்கும் பதில்களையும் படித்து தெளிவு பெற்றிருப்பீர்கள் என்று கருதுகிறோம். இறுதியாக அந்த பிரசுரத்தில் ஷரீஅத் பாதுகாப்புப் பேரவை முல்லாக்கள் முஸ்லிம்களுக்கு அவர்கள் காதியானிகள், அஹ்மதிகளுடன் அன்னியோன்னிய உறவு கொள்ளாமல், ஊர் நீக்கம் செய்து, முஸ்லிம்களின் அடக்கஸ்தலத்தில் அடக்கக்கூடாது என்பது போன்ற ஷரீஅத் தீர்ப்புக்களை (!!!) கற்பிக்கின்றனர். இறுதியாக நாம் இவர்களிடம் ஊர்நீக்கம் செய்தல், தொடர்பை துண்டித்தல், முஸ்லிம்கள் கபர்ஸ்தானில் அடக்கம் செய்யாமை போன்றவற்றை இஸ்லாத்தின் ஆரம்பகாலத்திலிருந்து, முஸ்லிம்கள் காஃபிர்களோடு செய்து வருகிறார்களா? அல்லது காஃபிர்கள் முஸ்லிம்களோடு செய்து வருகிறார்களா? என்பதை இவர்களிடம் கேட்கிறோம். இதற்கு மட்டும் நியாயமான முறையில் இவர்கள் பதில் கூறட்டும். ஆகவே இந்த இழிவான செயலால் நீங்கள் உங்களை எந்த கூட்டத்தோடு இணைக்கிறீர்கள் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். நினைவில் கொள்ளுங்கள், நாங்கள் முஸ்லிம்களாவோம், கலிமா லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதன் மீது எங்களது ஈமான் உள்ளது. நாங்கள் ஐந்து இஸ்லாமிய கடமைகளை உளப்பூர்வமாக செயலாற்றுகிறோம். ஈமானின் ஆறு தூண்களையும் மனதாலும் உயிராலும் ஏற்று நடக்கின்றோம். நாங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் போதனைக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது சலவாத்து ஓதக் கூடியவர்களாவோம். நாங்கள் செய்த ஒரேயொரு தவறு (நவூதுபில்லாஹ்) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப வருகை தந்த மஹ்தி மஸீஹை அடையாளம் கண்டு அவர் மீது ஈமான் கொண்டதுதான். இதிலிருந்து விலகியிருக்கும் உங்களுக்கு ஏசிப் பேசுவது, துன்பமிழைப்பதுதான் வேலை. ஆனால் இந்த வேலைகளை நீங்கள் ஷரீஅத்தின் பாதுகாப்பு என்னும் பெயரிலேயே செய்து வருவது தான் வியப்பாக உள்ளது. அல்லாஹ் உங்களுக்கு அறிவையும் நேர்வழியின் ஒளியையும் வழங்குவானாக. ஆமீன்.

அன்பர்களே! யார் வர வேண்டுமோ அவர் வந்து விட்டார்.
இந்த இரகசியத்தை உங்களுக்கு சூரியனும் சந்திரனும் கூட அறிவித்துள்ளது.

والسلام على من اتبع الهدى

(நேர்வழியை பின்பற்றுபவர்கள் மீது அமைதி நிலவுவதாக.)



ஒரு கோடி ரூபாய் பரிசு எனும் பிதற்றல்